# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 044 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 25, வெள்ளிக்கிழமை 09.01.2015


**வானிலை**

மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## போலி வாக்கு சீட்டுக்கள் சிக்கின

கொழும்பு, ஜன. 9

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளான நேற்று இரு இடங்களில் பெருந்தொகையான போலி வாக்குச் சீட்டுக்கள் புள்ளடியிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு சென்றவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று இடம் பெற்றது. பெரும்பாலான இடங்களில் வன்முறைகளின்றி

பக்.21

## வடக்கில் கைக்குண்டு தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 9

வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் வடக்கில் நேற்று மூன்று கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் அதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. வாக்களிப்பும் எந்தவித குழப்பமும் இல்லாது தொடர்ந்து நடைபெற்றது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில், சிறிலங்கா பாடசாலைக்கு 600 மீற்றர் தூரத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில்

பக்.21

**ஜனாதிபதித் தேர்தல் உதயன் விசேட பதிப்பு இன்று பிற்பகல் வெளியாகும்**

அச்சுக்குப் போகும் வரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின் படி



மைத்திரிபால சிறிசேன

**369,830**



மஹிந்த ராஜபக்ஷ

**213,289**

# வடக்கில் மைத்திரிக்கு அமோக ஆதரவு



யாழ்ப்பாணம், ஜனவரி 9

நேற்று நடந்து முடிந்த 7ஆவது ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் சார்பில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கில் அமோக ஆதரவு கிடைத்துள்ளது. நள்ளிரவு வரை கிடைத்த உத்தியோகரீதியிலான முடிவுகளின்படி அனைத்துத் தொகுதிகளிலும் தபால் மூல வாக்களிப்பிலும் மைத்திரி மிகப்பெரும் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றிருந்தார்.

இலங்கையின் 7ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று மிக மிக அமைதியான சூழலில் வடக்கில் இடம்பெற்றது. சேதங்கள் ஏதுமற்ற இரு குண்டுத் தாக்குதல்கள் தவிர்த்து அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை சிறிதுகூட பாதிக்காத வகையில் – வியத்தகு சூழலில் – வாக்களிப்பு இடம்பெற்று முடிந்தது. வாக்களிப்பு அன்றும் அதற்கு முந்திய சில தினங்களிலும் இராணுவத்தினரை முகாம்களுக்கு வெளியே காணமுடியவில்லை. குண்டுகள் வெடித்த இடங்களில் கூட அவர்கள் பிரசன்னமாகி இருக்கவில்லை. வழக்கமாக சிறு விபத்து இடம்பெற்றால் கூட அந்த இடத்துக்கு உடனடியாக விசாரணைக்கு விரையும் இராணுவத்தினர் கடந்த சில தினங்களாகவும், நேற்றைய தினமும் முகாம்களுக்கு வெளியே வராமல் இருந்தது மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பக்.21

## மாவட்ட ரீதியில் வாக்கு வீதம்

யாழ்ப்பாணம், ஜன.9

நேற்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மாவட்ட ரீதியாக அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில், நாடளாவிய ரீதியில் 70 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

பக்.21

# தெற்கில் கடும் போட்டி

கொழும்பு, ஜன.9

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையே மிகக் கடுமையான – பொறி பறக்கும் போட்டி நிலவுகின்றது.

இன்று அதிகாலை வரை அறிவிக்கப்பட்ட உத்தியோகபூர்வ முடிவுகளின்படி சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இருந்தார். எனினும் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முடிவுகளில் தொகுதி கள் ரீதியில் மிகச் சில வாக்குகள் வித்தியாசத்தில் இரு வேட்பாளர் களும் மாறி மாறி முன்னிலை பெற்றுவருகின்றனர். அதிகாலைவரையில் கிடைக்கப் பெற்ற உத்தியோகரீதியில் அல்லாத முடிவுகளின்படியும் எந்தவொரு வேட்பாளரும் வெற்றியை உறுதி செய்யக் கூடிய அளவுக்கான பெரும் எண்ணிக்கையிலான வாக்குகளை பெற்றிருக்கவில்லை. இந்தநிலை நீடித்தால் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் அளித்துள்ள வாக்குகள் முடிவுகளைத்தீர்மானிக்கும்பெரும் சக்தியைக் கொண்டிருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(உ–த,ற,5,4,21,23,86,ரி,426, 402,421)

# வடக்கில் மக்கள் வாக்களிப்பில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன. 9

வடக்கில், காலையில் வாக்களிப்பு மந்தமாக இடம்பெற்ற போதும் மதியமளவில் சூடுபிடித்தது. சகல பிரதேசங்களிலும் மக்கள் பெருமளவு ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது. பனிமூட்டமாகக் காணப்பட்ட போதும், மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். தொழிலுக்குச் செல்பவர்கள் அதிகாலையில் தமது வாக்குகளைச் செலுத்தினர். வடக்கு மாகாணம் முழுவதிலும் காலையில் வாக்களிப்பு 20 சதவீதமாகவே காணப்பட்டது.

நேரம் செல்லச் செல்ல, குடும்ப பெண்கள் அதிகளவில் வாக்களிப்பு நிலையத்துக்கு அயலவர்களுடன் இணைந்து சென்று வாக்களித்ததைக் காணமுடிந்தது. அத்துடன் புதிதாக முதன்

பக்.21

# அமைதியான தேர்தல்

யாழ்ப்பாணம், ஜன. 9

வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் தேர்தல் வரலாறுகாணாத அமைதியுடன் நேற்று நடைபெற்று முடிந்துள்ளது. மிகச் சிறு வன்முறைகள் இடம்பெற்றுள்ள போதும், 70 சதவீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

இலங்கையின் 7 ஆவது ஜனாதிபதியைத் தேர்வு செய்யும், ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது.

கடந்த காலத் தேர்தல்களை விட இந்த முறைத் தேர்தல் மிகவும் அமைதியாகவும், வன்முறைகள் குறைந்த தேர்தலாகவும் இடம் பெற்றுள்ளது. தேர்தல் நாளான நேற்று மிகப் பெரியளவிலான அசம்பாவிதங்கள் – வன்முறைகள் இடம்பெறலாம் என்று எதிர்வு கூறப்பட்டிருந்தது.

ஆனால் வடக்கு மாகாணத்திலோ நாட்டின் எந்தவொரு பகுதியிலுமோ அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. சுமுகமான முறையிலேயே வாக்களிப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினர்தலை

பக்.21

# செய்திகள்

## தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

### யாழ்ப்பாண மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 10,885 வாக்குகள் |
| மஹிந்த | 4,607 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 6,816 வாக்குகள் |
| மஹிந்த | 1,605 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### பொலநறுவை மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 9,480 வாக்குகள் |
| மஹிந்த | 4,309 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 13,115 வாக்குகள் |
| மைத்திரி | 13,031 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 11,864 வாக்குகள் |
| மைத்திரி | 9,053 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 19,131 வாக்குகள் |
| மஹிந்த | 17,869 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 13,181 வாக்குகள் |
| மைத்திரி | 10,392 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### மொணராகல மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 8,281 வாக்குகள் |
| மைத்திரி | 7,513 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### வன்னி மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 5,976 வாக்குகள் |
| மஹிந்த | 2,285 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### அம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 10,295 வாக்குகள் |
| மைத்திரி | 5,620 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### கேகாலை மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 14,976 வாக்குகள் |
| மைத்திரி | 14,163 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 4,045 வாக்குகள் |
| மைத்திரி | 3,939 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### அம்பாறை மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 11,917 வாக்குகள் |
| மஹிந்த | 9,713 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### காலி மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 16,116 வாக்குகள் |
| மைத்திரி | 13,879 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

### மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| மஹிந்த | 8,483 வாக்குகள் |
| மைத்திரி | 8,394 வாக்குகள் |

ஜனாதிபதி தேர்தல் – 2015

## மாவட்ட ரீதியான வாக்களிப்பு முடிவுகள்

### பருத்தித்துறை தொகுதி

| | |
|---|---|
| மைத்திரி | 17,388 வாக்குகள் |
| மஹிந்த | 4,262 வாக்குகள் |

### மானிப்பாய் தொகுதி

| | |
|---|---|
| மைத்திரி | 27,958 வாக்குகள் |
| மஹிந்த | 7,225 வாக்குகள் |

### உடுப்பிட்டி தொகுதி

| | |
|---|---|
| மைத்திரி | 18,119 வாக்குகள் |
| மஹிந்த | 3,837 வாக்குகள் |

### சாவகச்சேரி தொகுதி

| | |
|---|---|
| மைத்திரி | 23,514 வாக்குகள் |
| மஹிந்த | 5,647 வாக்குகள் |

### கிளிநொச்சி மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 38,956 வாக்குகள் |
| மஹிந்த | 13,300 வாக்குகள் |

### முல்லைத்தீவு மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 35,441 வாக்குகள் |
| மஹிந்த | 7,935 வாக்குகள் |

### காலி மாவட்டம்
காலி தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| மைத்திரி | 39,547 வாக்குகள் |
| மஹிந்த | 23,184 வாக்குகள் |

### வவுனியா மாவட்டம்

| | |
|---|---|
| மைத்திரி | 31,031 வாக்குகள் |
| மஹிந்த | 9,268 வாக்குகள் |

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு நிகரான வாக்களிப்பு வீதம், நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வடக்கில் பதிவாகியுள்ளது. 69 சதவீத வாக்குப் பதிவு வடக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலில், வடமாகாணத்தில் சராசரியாக 70.87 சதவீத வாக்களிப்பு பதிவாகியிருந்தது. நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், வடமாகாணத்தில் சராசரியாக 68.55 சதவீத வாக்குப் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் வடக்கு மாகாணசபைத் தேர்தலை விட அதிகளவிலான வாக்குப் பதிவாகியுள்ளது. அத்துடன் வடக்கில் யாழ்.மாவட்டத்திலேயே குறைவான வாக்குப் பதிவாகியுள்ளது. (ற–5)

| | வடக்கு மாகாணசபைத் தேர்தல் (2013) | ஜனாதிபதித் தேர்தல் (2015) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 64.15 | 61.14 |
| கிளிநொச்சி | 73.17 | 72.64 |
| முல்லைத்தீவு | 72.28 | 74.78 |
| மன்னார் | 74.22 | 68.52 |
| வவுனியா | 70.56 | 66.00 |

## 'கபே'அமைப்பிடம் 296 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 9

ஜனாதிபதி தேர்தல் தினமான நேற்று தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் உட்பட தேர்தல் சட்ட விதிகளை மீறும் வகையில் 296 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான 'கபே' தெரிவித்துள்ளது. அவற்றில் 17 வன்முறைச் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

கொழும்பு ஜானகி ஹோட்டலில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

"தேர்தல் வன்முறை தொடர்பில் 18 சம்பவங்கள் பதிவாகியிருந்தாலும் 9 சம்பவங்கள் பாரதூரமானவை. யாழ்ப்பாணம், வவுனியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை பாரதூரமானவையாகவே கருத வேண்டியுள்ளது. இறுதிநாளில் பொலிஸார் தமது கடமைகளை சரிவர நிறைவேற்றியுள்ளனர். தேர்தலுக்கு பின்னரும் 6 நாள்கள் எமது அமைப்பின் கண்காணிப்புப் பணிகள் தொடரும்.

அதேவேளை, மாவட்ட ரீதியில் தேர்தல் விதிமீறல் சம்பவங்களை நோக்கினால், கொழும்பு 14, கம்பஹா 54, களுத்துறை 10, கண்டி 10, மாத்தளை 1, நுவரெலிய 11, காலி 21, மாத்தறை 15, அம்பாந்தோட்டை 13, யாழ்ப்பாணம் 7, வன்னி 3, மட்டக்களப்பு 10, அம்பாறை 7, திருகோணமலை 10, புத்தளம் 23, குருணாகலை 13, அநுராதபுரம் 13, பொலன்னறுவை 7, பதுளை 9, மொனராகலை 5, இரத்தினபுரி 5, கேகாலை 7"– என்றும் அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற–4)

# ஆறு நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடியாது

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 9

தேர்தலுக்குப் பின்னரான ஆறு நாள்களுக்கு ஊர்வலங்களோ, மக்கள் பேரணிகளோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்துவதற்கு அனுமதியில்லை. அதனை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும்சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு முடிந்த பின்னர் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களைவிட இந்தத் தேர்தலில் குறைவான முறைப்பாடுகளே கிடைத்துள்ளன.

2005 ஆம் ஆண்டு ஆயிரத்து 200 முறைப்பாடுகளும், 2010 ஆம் ஆண்டு ஆயிரத்து 900 முறைப்பாடுகளும் அடங்கியுள்ளன. ஆனால், இம்முறை 405 முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி தேர்தல், சட்ட விதிமுறைகளை மீறியமைக்காக 100 முறைப்பாடுகளும், தாக்குதல் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 305 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

தேர்தலுக்கு முன்னர் மக்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பை தேர்தலுக்குப் பின்னரும் வழங்க வேண்டும். ஏனெனில், ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் சட்டத்தின் 89 ஆவது உறுப்புரையில், தேர்தலுக்குப் பின்னரான ஒரு வாரகாலத்துக்கு அதாவது, 6 நாள்களுக்கு ஊர்வலங்களோ, ஆர்ப்பாட்டங்களோ அல்லது மக்கள் பேரணிகளோ நடத்த அனுமதியில்லை.

இதை மீறுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். தேர்தலின் போது கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட 71 ஆயிரத்து 800 பொலிஸாரும் தொடர்ந்து 6 தினங்களுக்குக் கடமையில் ஈடுபடுவார்கள். தேர்தல் கடமைகளுக்காக பொலிஸாருக்கு வழங்கிய துப்பாக்கிகள் இன்னமும் மீளப் பெற்றுக்கொள்ளப்படாத காரணத்தால், இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு சாவை ஏற்படுத்தவும் எமக்கு அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, மக்கள் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தொந்தரவு ஏற்படுத்தும் வகையில் பட்டாசு கொளுத்த வேண்டாம்"– என்று அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார். (ற–4)




தேர்தல் தினமான நேற்றும் விதிமுறைகளை மீறி ஆளும் தரப்பினரால் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாக்குச் சாவடிகளுக்கு மிக அருகில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயருடன் வெற்றிலைச் சின்னம் பொறிக்கப்பட்ட சிறிய துண்டுகள் வீதியோரங்களில் வீசப்பட்டன. முற்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஹை ஏஸ் வாகனங்களில் வந்தவர்களால் இவை அள்ளி வீசப்பட்டன. கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலேயே இவ்வாறு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த–105)

## நேற்றையதினம் மட்டும் 328 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 9

ஜனாதிபதி தேர்தல் தினமான நேற்று மட்டும் நாடளாவிய ரீதியில் தேர்தல் விதி மீறல் சம்பவங்கள் தொடர்பில் 328 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திலுள்ள தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் 63 முறைப்பாடுகளும், 11 மணிவரை 117 முறைப்பாடுகளும், 12 மணிவரை 161 முறைப்பாடுகளும், 1 மணிவரை 223 முறைப்பாடுகளும், 2 மணிவரை 245 முறைப்பாடுகளும், 3 மணிவரை 251 முறைப்பாடுகளும், 4 மணிவரை 311 முறைப்பாடுகளும், 5 மணிவரை 328 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

வன்முறை, அச்சுறுத்தல்கள் தொடர்பில் குறைந்தளவு முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன. வாக்களிப்பு நிலையங்களில் பென்சில் பாவனை, பேனா பாவனை என்பவை தொடர்பிலே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தவிர அனைத்து இடங்களிலும், பெரியளவில் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாக மாவட்ட தெரிவத்தாட்சி அத்தியட்சகரிடமிருந்தோ, ஊடகங்களிடமிருந்தோ, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளிடமிருந்தோ எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. வாக்குப்பெட்டி மாற்றப்படும் என்று தற்போதும் எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. வாக்குப் பெட்டியை மாற்ற முடியாது. அவ்வாறு கூறப்படுவது அப்பட்டமான பொய். வாக்களிப்பு வீதம் குறித்து சரியாகக் குறிப்பிட முடியாது. வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டதன் பின்னரே எந்தளை வீத வாக்குப் பதிவு இடம்பெற்றது எனக் கூறமுடியும்"– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற–4)

## மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்தோர் நேற்று வாக்களிப்பதில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன. 9

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள வாக்காளர்கள் நேற்று வாக்களிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். குறித்த மக்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட பஸ் வண்டிகளின் சாரதிகள் ஆளும் கட்சியினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டனர்.

மன்னாரில் வாக்களிக்க தகுதியான 20 ஆயிரம் பேர் புத்தளத்தில் வசித்து வருகின்றனர். இவர்கள் ஜனாதிபதித் தேர்தலில், மன்னார் மாவட்டத்திற்கு வந்து வாக்களிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம், நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியு தீன் கோரிக்கை விடுத்திருந் தார்.

அதற்கமைய தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் கடந்த 7 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில், இந்த மக்கள் வாக்களிக்கச் செல்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின், தனியார் பஸ் வண்டிகள் அல்லது வாகனங்களில் சென்று வாக்களிக்க தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு தடைகள் ஏற்படாது தேவையான பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்குமாறும் வேண்டியிருந்தார்.

இந்த பஸ் வண்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்பட்டு இதனை நெறிப்படுத்தும் பொறுப்பினை அநுராதபுர மாவட்ட மேலதிக அரச அதிபரும் தேர்தல் ஆணையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார்.

புத்தளம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பஸ் வண்டிகள் நேற்றுக் கொண்டுவரப்பட்டிருந்தன. இதன் போது அங்கு புத்தளம் மாவட்ட ஆளும் கட்சியின் அரசியல்வாதியொருவர் சாரதிகளை அச்சுறுத்தி மக்களை ஏற்றிச் செல்லக் கூடாது என்று பஸ்களை திருப்பியனுப்பியுள்ளார்.

இருந்த போதும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் முச்சக்கர வண்டி, கன்டர், மோட்டர் சைக்கிள் உள்ளிட்ட தனியார் வாகனங்கள் பலவற்றிலும் மன்னார் மாவட்டத்துக்கு வந்து மக்கள் வாக்களிக்கச் சென்றனர்.

இதேவேளை நேற்று அதிகாலை மன்னார் நோக்கி வாக்களார்கள் சிலர் தனியார் வாகனங்களில் சென்று கொண்டிருந்த போது, புத்தளம் – அநுராதபுரம் பிரதான வீதியினை மறித்து பெரிய மரமொன்றினை அறுத்து தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவற்றை அதிகாலையில் சென்ற பொலிஸார் பிரதேச மக்களின் உதவியுடன் அகற்றி போக்குவரத்தை வழமைக்கு கொண்டு வந்தனர். (ற–5–56)

## வடக்கு, கிழக்கை பிரித்த எஸ்.எல்.குணசேகர சாவு

கொழும்பு, ஜன. 9

2006 ஆம் ஆண்டு வடக்கு –கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு பிரதான சூத்திரதாரியாக இருந்த, சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர ஜனாதிபதித் தேர்தல் நாளான நேற்று உடல்நலக்குறைவினால் உயிரிழந்துள்ளார்.

சிங்கள பௌத்த கடும்போக்காளரும், அரசமைப்புச் சட்ட நிபுணருமான எஸ்.எல். குணசேகர (வயது – 71) உடல்நலக் குறைவினால் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

தமிழர்களுக்கு அதிகாரங்கள், உரிமைகளை வழங்குவதற்கு எதிரான கடும் போக்கைக் கொண்டிருந்த இவர், இந்திய–இலங்கை உடன்பாட்டின் மூலம் ஒன்றிணைக்கப்பட்டிருந்த வடக்கு–கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கான முக்கிய சூத்திரதாரியாக விளங்கியவர். சட்ட நிபுணர்களும், சிங்கள பௌத்த பேரினவாதிகளுமான எச்.எல்.டிசில்வா, கோமின் தயாசிறி ஆகியோருடன் இணைந்து உயர்நீதிமன்றத்தில் வடக்கு–கிழக்கு மாகாணங்களின் இணைப்பு தவறானது என்ற தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்தவர் எஸ்.எல்.குணசேகர என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)

# செய்திகள்

## வடக்கில் 2,554 பேருக்கு கடந்த வருடம் டெங்கு

### யாழ். மாவட்டத்தில் மட்டும் 1,833 பேர்

யாழ்ப்பாணம், ஜன. 9

நாட்டில் கடந்த வருடம் 47 ஆயிரத்து 195 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் சிகிச்சை பயனளிக்காது சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கில் 2 ஆயிரத்து 554 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஆயிரத்து 833 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றுசுகாதார அமைச்சின்புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். வடக்கில் கடந்த மாதம் 560 பேர் பாதிக்கப்பட்டதோடு, இதே மாதத்தில் தான் சிறுவன் ஒருவன் உயிரிழந்திருந் தான். இதில் யாழ்மாவட்டத்தில் மாத்திரம் 419 பேர் பாதிக்கப்பட்டனர்.

வடக்கில் கடந்த நவம்பரில் 482 பேர் பாதிக்கப்பட்டனர். அதில் யாழ்ப்பாணத்தில் 317 பேர் பாதிக்கப்பட்டனர். கடந்த ஒக்ரோபரில் வடக்கில் 310 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டனர். அதில் யாழ்ப்பாணத்தில் 212 பேர் உள்ளடங்குகின்றனர். கடந்தவருடத்தில் மழை காலம் நிலவிய இறுதி 3 மாதங்களிலேயே அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். சிறுவர்கள், முதியவர்கள் பெண்கள் என எந்த வகையினரும் டெங்குத் தொற்றுக்குத் தப்பவில்லை.

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஜனவரியில் 148 பேரும், பெப்ரவரியில் 92 பேரும், மார்ச்சில் 58 பேரும், ஏப்ரலில் 59 பேரும், மே மாதத்தில் 73 பேரும், ஜூனில் 89 பேரும், ஜூலையில் 148 பேரும், ஓகஸ்ட்டில் 123 பேரும், செப்ரெம்பரில் 95 பேருமாக ஆயிரத்து 833 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் ஜனவரியிலிருந்து ஒக்ரோபர் மாதம் வரை 10 இற்கும் குறைவானவர்களே டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு நவம்பரில் 15 பேரும், டிசெம்பரில் 19 பேருமாக 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் ஜனவரியில் இருந்து மே மாதம் வரை 5 இற்கும் குறைவானவர்களே டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜூன் மாதத்தில் 20 பேரும், ஜூலையில் 13 பேரும், ஓகஸ்டில் 10 பேரும், செப்ரெம்பரில் 40 பேரும், ஒக்ரோபரில் 67 பேரும், நவம்பரில் 119 பேரும், டிசெம்பரில் 82 பேருமாக கடந்த மாதம் 357 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் ஜனவரியில் 6 பேரும், பெப்ரவரியில் 12 பேரும், மார்ச்சில் 14 பேரும், ஏப்ரலில் 9 பேரும், மே மாதத்தில் 6 பேரும், ஜூனில் 33 பேரும், ஜூலையில் 16 பேரும், ஓகஸ்டில் 5 பேரும், செப்ரம்பரில் 4 பேரும், ஒக்ரோபரில் 7 பேரும், நவம்பரில் 14 பேரும், டிசெம்பரில் 16 பேருமாக 142 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஜனவரியில் 23 பேரும், பெப்ரவரியில் 9 பேரும், மார்ச்சில் 17 பேரும், ஏப்ரல்– ஒக்ரோபர் வரை 10 இற்கும் குறைவானவர்களும், நவம்பரில் 17 பேரும், டிசெம்பரில் 24 பேருமாக 132 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் அதிகளவாகக் கொழும்பில் 14 ஆயிரத்து 651 பேரும், கம்பகாவில் 8 ஆயிரத்து 707 பேரும், களுத் துறை, கண்டி, குருநாகல், இரத்தினபுரியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுமாக 47 ஆயிரத்து 195 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத அடிப்படையில் மே, ஜூன், ஜூலை, ஓகஸ்ட், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களிலேயே 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாநகர எல்லையில் 3 ஆயிரத்து 618 பேரும், கொழும்பின் ஏனைய இடங்களில் 11 ஆயிரத்து 33 பேரும் டெங்கினால் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

2013 இல் 32 ஆயிரத்து 63 பேரும், 2012 இல் 44 ஆயிரத்து 456 பேரும், 2011 இல் 28 ஆயிரத்து 473 பேரும், 2010 இல் 34 ஆயிரத்து 105 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டனர் என்றுசுகாதார அமைச்சின்புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த–4)

## 161 மில்லியனில் 5 குளங்கள் வவுனியாவில் புனரமைப்பு

**44% விவசாயக் குடும்பங்கள் பயனடையக் கூடியவகையில்**

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 161.6 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 447 விவசாயக் குடும்பங்கள் பயனடையக் கூடியதாக 5 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மடுக்கந்தக் குளம், மாளிகைக் குளம், சேமமடுக் குளம், கொம்பு வைத்த குளம் பெரியதம்பனைக் குளம் ஆகிய 5 குளங்களும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம் ஆகிய நிதி மூலங்களில் இருந்து புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியாக 2 மில்லியன் நிதியில் சிதைவடைந்திருந்த மடுக்கந்தக் குளத்தின் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 95 ஏக்கர் விஸ்தீரணத்துக்கு விரயமாக்கப்படக் கூடிய நீர் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் 25 விவசாயக் குடும்பங்கள் இதனூடாக நன்மையடைந்துள்ளன.

அத்துடன் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்ட நிதி மூலம் 32.30 மில்லியன் ரூபா நிதியில் மாளிகைக் குளம், 60.60 மில்லியன் ரூபா நிதியில் சேமமடுக் குளம், 22.90 மில்லியன் ரூபா நிதியில் கொம்புவைத்த குளம், 43.80 மில்லியன் ரூபா நிதியில் பெரியதம்பனைக் குளம் ஆகியன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புனரமைப்பின் ஊடாகக் கட்டுடைப்பெடுக்கும் அபாயம் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் 422 விவசாயக் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

கடந்த சீரற்ற காலநிலையின் போதும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குளங்களில் நீர் சேமிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த போகத்தில் விவசாயிகள் இந்தக் குளங்களின் ஊடாக நன்மையடைவர் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த–14)

## பனங்கிழங்கு சீசன் ஆரம்பம்

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளுக்குப் பனங்கிழங்கு பெருமளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றது.

இதனால் பனங்கிழங்குகள் விலை வீழ்ச்சியடைந்து வருகின்றது.

கடந்தமாதம் எட்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பனங்கிழங்கு நேற்று 4 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

தினமும் பெருமளவு கிழங்குகள் சந்தைக்கு வருவதால் விலை வீழ்ச்சி ஏற்படலாமெனத் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வரும் தென்னிலங்கைசுற்றுலாப்பயணிகள் பெருமளவு கிழங்கைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகிறது. (த–9)

## பாதுகாப்பு கருதி பஸ்கள் மட்டுப்படுத்திய சேவை

யாழ்ப்பாணம்.ஜன.9

ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தென் பகுதி நோக்கிய அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் நேற்றுத் மட்டுப்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வழமையாக தென் பகுதிக்குச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் எதுவும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. எனினும் தனியார் பஸ்களில் பயண முன் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. பயணிகளின் வருகைக்கு ஏற்ப தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என தனியார் பஸ் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை– யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயில் சேவைகள் அனைத்தும் வழமையான சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தின் பிரதான அதிகாரிரி.பிரதீபன் தெரிவித்தார்.

பாதுகாப்புக் கருதியே அரச சேவை பஸ்கள் நேற்றுச் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்தனர்.

(த–14)

## வலையில் அதிகம் சிக்கியது ஓட்டி மீன்

யாழ்ப்பாணம், ஜன.9

பாஷையூர் பகுதி மீனவர்களின் வலையில் அதிளவிலான ஓட்டி மீன்கள் சிக்கிக் கொண்டதால் சந்தையில் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

நேற்று பாஷையூர் சந்தையில் ஒரு கிலோ ஓட்டி மீன் 50 ரூபாவாக விற்கப்பட்டது.தற்போதைய காலநிலையால் இந்த மீன்கள் அதிகளவில் சிக்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாகக் கடந்த மூன்று நாள்களாக இந்த மீன்கள் அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலை வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது.

மீன்களின் விலை வீழ்ச்சியை பயன்படுத்தி நுகர்வோர் அவற்றைக் கூடுதலாக வாங்கிச் செல்கின்றனர். (த–17)

## கூழாவடியில் படையினருக்கு காணிகள், வீடுகள் சுவீகரிப்பு

வலி.தென்மேற்கு, ஜன. 9

பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வலி.வடக்குப் பிரதேசத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளையும் வீடுகளையும் அடாத்தான முறையில் சுவீகரித்து முகாம் அமைத்து வாழ்ந்து வரும் படையினர் தற்பொழுது வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வரும் ஆனைக்கோட்டை கூழாவடி என்னும் இடத்தில் ஜே/133 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தானியாருக்குச் சொந்தமான ஐந்து வீடுகளையும், காணிகளையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரித்துள்ளனர்.

இது சம்பந்தமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக காணி உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ள யாழ். மாவட்ட அலுவலகக் காணி சுவீகரிப்பு அதிகாரி இந்த மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள காணி கையளிப்புவைபவத்தில்தவறாதுகலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஆனைக்கோட்டைகூழாவடி என்னும் இடத்தில் ஜே/ 133 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஐந்து வீடுகளையும் 1995 ஆம் ஆண்டு கைப்பற்றிய இராணுவத்தினர் அங்கு முகாம் அமைத்து இயங்கி வருகிறார்கள்.

மரியாம்பிள்ளை சிங்கராஜா, சுப்ரமணியம் தப்பித்துரை, திருமதி யோகராஜா விக்ரோறியா, இராஜப்பு ஜேக்கப், அம்பலவாணர் ஸ்ரீ ஆகிய ஐந்து பேருடைய வீடுகளிலும் இருபது வருடங்களுக்கு மேலாகப் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு மேற்படி காணிகளை அளப்பதற்கு வந்த அதிகாரிகள் காணிகளின் எல்லைகளைக் காட்டுமாறு காணி உரிமையாளர்களைக் கோரியிருந்தார். ஆனால் அவர்கள் மறுப்பு தெரிவித்ததினால் அதிகாரிகள் திரும்பிச் சென்றிருந்தனர். இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட உரிமையாளர்கள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டதுடன் வீடுகளை மீட்டுத் தருமாறு கோரியிருந்தனர். இந்த நிலையில் ஏற்கனவே வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்ட காணிகளையும் வீடுகளையும் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த–115)

# கருத்து

## வாசகர் திருமுகம்

### கரைச்சி இந்து மயானத்துக்கு விமோசனம் கிடைக்குமா?

வலி.மேற்குப் பிரிவில் அமைந்துள்ள சங்கானை கரைச்சி மயானம் ஏராளமான மக்களால் உயிரிழந்தது அவது உறவினர்களுக்கு இறுதிக் கிரியைகள் நடத்தப்படும் ஒரு புனித இடமாகும். ஆனால் இந்த மயானம் எவரது கவனிப்பும் இல்லாது மோசமான நிலையில் காணப்படுகின்றது.

பெயரளவில் மட்டும் மயான அபிவிருத்திச் சபை ஒன்று செயற்படுகின்றது. தகனக் கிரியை ஒன்றுக்கு 500 ரூபா வாங்குவதோடு அந்தச் சபையின் நடவடிக்கை முடிவடைகின்றது. மயானத்துக்குப் போகின்ற பாதை உட்பட மயானச் சூழலே கால் மிதிக்க முடியாத அளவுக்கு பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது. பற்றாக்குறைக்கு அருகில் கொல்களம் வேறு. கொல் களத்திலிருந்து வீசப்படும் விலங்குக் கழிவுகள், கட்டாக்காலி நாய்களால் அந்தச் சூழல் முழுவதும் கொண்டு சொல்லப்படுகின்றது. இறுதிக் கிரியை நிகழ்த்தும்போது மயானத்தில் நிற்பவர்களை நரகலோகத்துக்கு அழைத்துச் செல்லும் அளவுக்கு ஒரே துர்நாற்றம் வீசுகின்றது. தகனக் கொட்டகை கூட ஆயிரம் ஓட்டைகளுடன் காணப்படுகின்றது. நிமிர்ந்தால் வானம் தெரியும். இதைவிட பிரதேச சபையினரால் சேகரிக்கப்படும் குப்பை மற்றும் கழிவுப் பொருள்களை தாம் நினைத்த இடத்தில் (மயான சூழலில்) கொண்டு வந்து கொட்டிவிட்டு ஊழியர்கள் சென்றுவிடுகின்றனர். ஏன் இதற்கென ஒரு இடத்தை ஒதுக்கி சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்காமல் செயற்படுவதற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடவடிக்கை எடுக்க முடியாதா? மயானம் என்பது ஒரு புனித இடம். இறுதிக் கிரியைகளை உறவினர்கள் அருவருப்பு, வெறுப்பின்றி செய்வதற்கு மயான அபிவிருத்தி சபையினர் மற்றும் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊர்மக்கள் சார்பாகத் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

*சங்கானையூர்,*
*சிவதாண்டவன்.*


### போஷாக்கு உணவு யாருக்கு?

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் போஷாக்குத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் அனைவருமே உணவை விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். மாணவர்களுக்கு தரம்–9 வரைதான் உணவு கொடுக்க வேண்டும் என்ற நியதி உண்டு. ஆனால் தரம் 10,11, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் தாமும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்படும். ஆனால் கொடுக்க மாட்டார்கள். இங்குள்ள பாடசாலையொன்றில் ஒரு சில ஆசிரியர்களும் சமையல்காரரும் சாப்பாட்டைக் கொண்டு சென்றுவிடுவார்கள். இது தொடர்பாகக் கேட்டால் கோபிப்பார்கள்.

ஆனால், வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் கூப்பிட்டு கூப்பிட்டுத் தருவார்கள். ஏனெனில் அன்று சைவ உணவு சமைக்கப்படும். மீதி நிறையவே இருக்கும். நாம் பசியுடன் இருக்கும் போது உணவைச் சுமந்து கொண்டு சென்று ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் போது எமக்கு எப்படி இருக்கும்? மதிய உணவு ஆசிரியர்களுக்கா? மாணவர்களுக்கா? இது உரியவர்களின் கவனத்துக்கு.

*பாதிக்கப்பட்ட மாணவன்*
*கிளிநொச்சி*

### கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

### ஏன் இந்தத் திடீர் மாற்றம் ?

ஜனாதிபதித் தேர்தல் நேற்று, வழமைக்கு மாறாக அமைதியாக இடம்பெற்று முடிந்துள்ளது. வன்முறைகள், அசம்பாவிதங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. குறிப்பாக வடக்கில், கடந்த 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இராணுவத்தினர் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தது போன்று இந்தத் தேர்தலிலும் குழப்பங்களை ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இதற்கு மேலாக ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று, வடக்கு மாகாண தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனும் கோரியிருந்தனர். அதனை விட, இந்தத் தேர்தல் சிங்கள மக்களுக்கான தேர்தல் என்கின்ற மனநிலையும் சமூக வலைத் தளங்கள் ஊடாக பரப்பப்பட்டிருந்தது.

இவையெல்லாம் வடபகுதியில் தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியிருந்தது. அத்துடன் வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது காணப்பட்ட எழுச்சி காணப்படுமா என்ற சந்தேகமும் உருவாகியிருந்தது.

எல்லாக் கேள்விகளுக்கும் மக்கள் தங்கள் வாக்களிப்பால் பதில் வழங்கியுள்ளனர். யாருமே எதிர்பாராத வகையில், தமிழ் மக்கள் அதி உச்சளவில் வடக்கில் நேற்று வாக்களித்துள்ளனர். வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு நிகரான அளவில் வாக்குப்பதிவு நேற்றைய தேர்தலிலும் இடம்பெற்றுள்ளது. மேலும், கடந்த காலங்களைப் போன்று எந்த வன்முறைகளும் இடம்பெறவில்லை. எந்தக் குழப்பங்களும் இடம்பெறவில்லை. ஆச்சரியத்தக்க வகையில், இந்தத் தேர்தல் இலங்கையிலா நடைபெறுகின்றது என்று சந்தேகிக்கும் வகையில், அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது.

இந்த மாற்றங்களுக்கு மேலாக வடக்கில், சில சுவாரசியமான சம்பவங்களும் அரங்கேறியுள்ளது. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு திரட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றிருந்தார். இந்த நிலையில் நேற்றைய தினம் கல்வியன்காட்டுப் பகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்ற வயதான தயார் ஒருவர், சந்திரிகாவின் பெயரை வாக்குச் சீட்டில் காணவில்லை என்று தேர்தல் அதிகாரிகளிடம் கேட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

அதே போன்று, வாக்களித்துவிட்டு வெளியில் வந்த மக்களிடம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் வினவிய போது, கூட்டமைப்புக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வாக்குப் போட்டு விட்டு வருகின்றோம் என்று பதிலளித்துள்ளனர். மக்கள் அதிகளவில் வாக்களித்திருந்தாலும், அவர்கள் எந்த மனநிலையில் இருந்து வாக்களித்திருக்கின்றார்கள் என்பதற்கு இதனைத் தவிர வேறு உதாரணங்கள் தேவையில்லை.

ஆனாலும், இந்தத் தேர்தலில் திடீர் மாற்றங்கள், ஆட்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்துமா ? முடிவு இன்று தெரிந்து விடும்.

பத்தி எழுத்து

# சோம்பேறிகளுக்குக் கிடைத்த வரம்!



கோமளபுரம் அழகிய சிறிய நகரம். அந்த நகரத்தில் மூன்று சோம்பேறிகள் இருந்தனர். மூவரும் எந்த வேலைக்கும் போக மாட்டார்கள். வேலை செய்பவர்களைப் பார்த்துக் கேலி செய்வதுதான் இவர்களின் வேலை. அதில், ஒருவன் பேராசை பிடித்தவன். மற்றொருவன் பொறாமைக் குணம் கொண்டவன். மூன்றாவது ஆள் சுயநலக்காரன். பேராசைக்காரனுக்கோ எவ்வளவு கிடைத்தாலும் போதாது. 'இன்னும் வேணும், இன்னும் வேணும்...'என்று அலைகிற மனம் கொண்டவன். பொறாமைக்காரனுக்கு, அடுத்தவர் பொருள் மேல் எப்போதும் ஆசை. ஆள் அசந்த நேரமாகப் பார்த்து, மற்றவர்களுடைய பொருளையும் சேர்த்துச் சுருட்டிக்கொள்வான். 'ஊரில் வேறு யாரும் சந்தோஷமாக இருந்து விடக் கூடாது, தான் மட்டும்தான் சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்கிற நினைப்பு உடையவன் சுயநலக்காரன். ஒருநாள்... மூவரும் சேர்ந்து ஏதாவது தொழில் செய்யலாமென்று முடிவெடுத்தார்கள். 'என்னால் பணம் எதுவும் தர முடியாது. வேணும் என்றால் தொழில் தொடங்க யோசனைமட்டும் சொல்கிறேன். ஆனால், வரும் இலாபத்தில் பாதி எனக்குத் தந்திடணும்...!' என்று சொன்னான் பேராசைக்காரன். 'என்னால் குனிஞ்சு நிமிந்து வேலையெல்லாம் செய்ய முடியாது. வேலைக்கு வேற ஆள்களைப் போடுங்க. அவங்கக்கிட்டே நல்லா விரட்டி வேலை வாங்க எனக்குத் தெரியும்...!' – இது பொறாமைக்காரன். 'நீ தொழில் செய்ய பங்குப் பணம் தர மாட்டே. நீ வேலையே செய்ய மாட்டே...நான் மட்டுமென்ன இளிச்சவாயனா...?' என்று மனசுக்குள்ளேயே நினைத்துக் கொண்ட சுயநலக்காரன் எதுவும் சொல்லாமல் 'உம்' மென்று இருந்தான். தொழில் எதுவும் செய்யாமலேயே பணக்காரனாக முடியுமா...? முதல் போடாமலேயே நிறைய லாபம் அடைய என்ன தொழில் செய்யலாம்...? என்பது போன்ற குழப்பங்களோடு, மூவரும் குளிக்கக் கிணற்றுக்குப் போனார்கள். அப்போது... திடீரென கிணற்றுக்குள்ளிருந்து ஒரு அழகான தேவதை தோன்றியது. துயரத்தில் இருப்பவருக்கு வரம் தந்து உதவுகிற தேவதை அது. வேறுவேறு குணம் படைத்த நீங்கள் மூவரும் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்து, ஒரு தொழில் தொடங்க முடிவெடுத்திருப்பது நல்ல முடிவு. உங்களின் ஒற்றுமையை மெச்சி, உங்கள் மூவருக்கும் ஆளுக்கொரு வரம் தருகிறேன். கேளுங்கள்... என்றது தேவதை. மூவர் முகத்திலும் அளவில்லா மகிழ்ச்சி பொங்கியது. 'ஆகா...கிடைச்சது அதிர்ஷ்டம். இப்ப கேக்கிற வரத்தை வச்சு, இனி எந்தக் கஷ்டமும் படாம நம்ம வாழ்க்கைய ஓட்டிடணும்...' என்று நினைத்துக் கொண்டார்கள். 'என்ன வரம் கேட்பது...?' என்று மூவரும் யோசிக்கத் தொடங்கினார்கள். 'வரம் எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேளுங்கள்...' என்றது தேவதை. பேராசைக்காரன், 'இந்த உலகத்திலேயே யாரிடமும் இல்லாத அளவுக்கு பொன்னும், பொருளோடும், நீண்ட ஆயுளோடும் வாழ்கிற வரம் வேண்டும்...' என்றான். உடனே, தேவதை 'நீ கேட்ட வரத்தை அளித்தேன்...' என்றது. பேராசைக்காரனுக்கு பெரும் மகிழ்ச்சி. பொறாமைக்காரனுக்கோ மனம் தாங்கவில்லை. 'ஏராளமான பொன்னோடும், பொருளோடும், நீண்ட ஆயுளோடும் வாழ்கிற என் நண்பனே என்னைப் பார்த்துப் பொறாமைப்படுகிற அளவுக்கு வசதியும் ஆயுளும் கொண்ட, இப்பூமியின் கடைசி மனிதனாக நான் வாழ வேண்டும்...' என்கிற வரத்தைக் கேட்டான் பொறாமைக்காரன். 'உனக்கும் கேட்ட வரத்தைத் தருகிறேன்...' என்றது தேவதை. பொறாமைக்காரனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. சுயநலக்காரனோ 'என்ன வரம் கேட்பது ?' என்று பலமாக யோசித்தான். 'சீக்கிரமாக வரத்தை கேள்; நான் போக வேண்டும், நேரமாகி விட்டது...' என்றது தேவதை. யோசித்து யோசித்து குழம்பிய சுயநலக்காரன், சட்டென முடிவெடுத்து ஒரு வரம் கேட்டான். 'இவர்கள் இருவருக்கும் கொடுத்த வரங்களைத் திருப்பி வாங்கிவிடுங்கள். இதுவே எனக்கான வரம்...' என்றான். 'அப்படியே ஆகட்டும்...' என்று, இருவருக்கும் கொடுத்த வரங்களைத் திருப்பி வாங்கிக்கொண்டு மறைந்தது தேவதை. 'உள்ளதும் போச்சே...!' என்கிற மன வருத்தத்துடன் வெறுங்கையோடு வீடு திரும்பினார்கள் மூவரும்.

## நாள் காட்டி


*நாளைக் காட்டும் நாள்காட்டி*
*கிழமையையும் சேர்த்தே அதுகாட்டும்*
*நாளும் நாமதைக் கிழித்தாலும்*
*வருத்தப்படாத நாள்காட்டி!*

*திட்டம் தீட்ட உதவிடுமே*
*தினமும் ஞாபகப்படுத்திடுமே*
*நடக்கும் நிகழ்வைக் குறித்திடவே*
*நாள்;குறிப்பேடாகப் பயன்படுமே!*

*அனைத்து மதத்தின் பண்டிகையும்*
*ஆன்றோர் சான்றோர் பிறந்தநாளும்*
*நல்ல கெட்ட நேரத்தையும்*
*நாளும் சொல்லும் நாள்காட்டி!*

*ஜனவரியில் பிறக்கும் நாள்காட்டி*
*டிசெம்பரில் ஆயுளை முடித்திடுமே*
*அழிவு என்றும் இதற்கில்லை*
*மீண்டும் புதிதாய்ப் பிறந்து வரும்!*



வ.கிதுஷன்
சாவகச்சேரி இந்துக்
கல்லூரி




(SAMSUNG CHATON)

## 'சாம்சங்'கின் சாற் ஒன் சேவைக்கு மூடுவிழா

சாம்சங் (Samsung) நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட (ChatOn) சாற் ஒன் குறுஞ்செய்திச் சேவை நிறுத்தப்படவுள்ளது.

இதனை (Samsung) சாம்சங் நிறுவனமே உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளில் இந்தச்சேவை நிறுத்தப்படவுள்ளது.

எனினும் அமெரிக்காவில் இந்தச் சேவையை நிறுத்துவது தொடர்பாக சரியான திகதி ஒன்று குறிப்பிடப்படவில்லை. இருந்த போதிலும் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இந்தச்சேவை முழுமையாக நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது ஏனைய பிரதான சேவைகளின் எதிர்கால நோக்கம் கருதியே இச் சேவை நிறுத்தப்படவுள்ளதாக சாம்சங் நிறுவனம் தெரிவித்துள்ளது.


## பேஸ்புக்கில் புகைப்படங்களை எடிட் செய்யும் வசதி

முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக்கில் நாள்தோறும் மில்லியன் கணக்கான புகைப்படங்கள் தரவேற்றப்படுகின்றன.

இவ்வாறு தரவேற்றப்படும் புகைப்படங்களை ஒன்லைனில் வைத்தே மேம்படுத்துவதற்கான வசதியொன்றை பேஸ்புக் அறிமுகம் செய்துள்ளது.


தற்போது ஐபோன் (iPhone) அப்பிளிக்கேஷன் ஊடாக செயற்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்த வசதியின் ஊடாக புகைப்படங்களின் அளவை மாற்றுதல், தெளிவை அதிகரித்தல், நிழல்களை உருவாக்குதல், வெளிச்சத்தை சரி செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை நீக்கும் வசதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சொனி எக்ஸ் பெரியா இசற் 4 தொடர்பான தகவல்கள்

(SONY XPERIA Z4)




சொனி நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள Sony Xperia Z4 ஸ்மார்ட் கைப்பேசி தொடர்பான பல தகவல்கள் வெளியிடப்பட்டிருந்த நிலையில் தற்போது புகைப்படம் உட்பட மேலதிக தகவல்களும் வெளியாகியுள்ளன. சொனி நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிகள் சில ஹேக் செய்யப்பட்ட பின்னரே இந்தப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கைப்பேசியானது 5.5 அங்குல அளவு, 2560 X 1440 Pixel Resolution cç|B QHD தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 64–bit Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 4 GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

இவற்றுடன் 22 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமராவையும் கொண்டுள்ளது. இது 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வீணாக்கும் நேரத்தை காசாகவும் ஆக்கலாம்

## TSU சமூகவலைத்தளத்தின் புதிய முயற்சி




–த.தவரூபன் –

சமூக வலைத்தளங்களில் நாங்கள் செலவிடும் காலம் அதிகம் தான். இனிவரும் தொழில் நுட்பங்கள் சமூக வலைத்தளங்களைமுன்னிலைப் படுத்தியே இருக்கப் போகின்றன என்பதும் அறிந்ததே. இந்த நிலையில் ரிஎஸ்யூ TSU சமூகவலைத்தளம் பயனாளர்களுக்கு 90 வீத பணத்தைப் பகிர்ந்தளிக்கும் உத்தியை புகுத்தி அவர்களை தன் பக்கம் ஈர்க்க முயற்சிக்கிறது.

முகப் புத்தகம் போலவே இந்த சமூக வலைத்தளம்(TSU) உருவெடுத்துள்ளது. அதில் எமக்கு பணமும் தருவதாக கூறுகிறார்கள். அவர்கள் விளம்பரங்களைப் பிரசுரிப்பதால் வரும், வருமானத்தில் பங்காளிகளான எமக்கு தருவது நியாயம் தானே!

சமூகவலைத்தளங்களில் பொதுவாக அனைவரும் தமது செயற்பாடுகளையும் விரும்பியவைகளையும் பகிருகின்றனர். அதே வேளை தமக்கு பிடித்தவற்றைக் குறிப்பிடுகின்றனர் அல்லது கருத்து தெரிவிக்கின்றனர். பலர் அதற்கு அடிமையாகவே இருக்கின்றனர்.

இந்தநிலையில் அதனால் பண மீட்டும் Facebook டுவிற்றர் (Twitter) வட்ஸ்அப் (Whats up) போன்ற நிறுவனங்கள் எவையும் பயனாளர்களுக்கு தமது இலாபத்தில் சிறிதளவையேனும் பகிருவதில்லை. கூகுள் நிறுவனம் தனது விளம்பரத்தினை பிரசுரிக்கும் தளத்திற்கு விளம்பரத்தினால் வரும் இலாபத்தின் ஒரு பகுதியை கூகுள்அட்சென்ஸ் (Google Adsense) கட்டமைப்பின் ஊடாக வழங்கி வருகிறது. ஆனால் Face Book அப்படி வழங்குவதில்லை என்பது வருத்தத்திற்குரியதே. அப்படியிருக்கையில் மார்க் உலகப்பணக்காரர் வரிசையில் இடப்பிடித்ததில் ஆச்சரியமில்லை.

இந்தநிலையில் அமெரிக்கக் குடியரசைச் சேர்ந்த செபஸ்தியன் குழுவின் இந்த TSU சமூக வலைத்தளத்தின் முயற்சி வரவேற்கத்தக்கதே. ஆனால் நமது நண்பர்கள் உடனடியாக பெரிய தொகையினை பார்க்கவேண்டும் என்று ஆசைப்படக்கூடாது. ஒன்றுமே இல்லாத சமயத்தில் சிறியளவிலேனும் தரச் சம்மதித்த TSU வைபாராட்டவேண்டும். அந்த சமூக வலைத்தளத்தில்பணம்பகிரப்படும்விதம்சற்று வித்தியாசமானது.

நாம் பதிவு போட்டதற்காகவோ லைக் செய்ததற்காகவோ எண்ணிக்கையின் அடிப்படையில் பணம் தரமாட்டார்கள். அதன் போது அவர்களது விளம்பரங்களினால் கிடைத்த பணத்தையே பகிருகின்றனர். ஒருவகையில் நாம்அறிந்த பிரமிட் வருமானக் கட்டமைப்பினை ஒத்ததாயினும் நம்மால் அறிமுகப்படுத் தப்படும் பயனாளர்களின் (Network) எண்ணிக்கை , நாம் சொந்தமாகவோ மற்றவர்களினதோ எந்தளவு சிறந்த விடங்களை பகிருகின்றோம் என்பதையும் பொறுத்து பகிரல்களாலும் பார்வைகளாலும் கிடைக்கும் பணத்தை அந்த வகையில் சகலருக்கும் பகிருகின்றபோது ஒருவருக்கு கிடைக்கும் தொகை சிறிதாகுவதில் வியப்பில்லை.

அதற்காக ஒரே நாளில் வேறு வேலை செய்யாமல் சமூகவலைத் தளத்திலேயே கிடந்தால் நமது வேலையால் வருகின்ற வருமானம் வராமல் போய் விடும். எனவே பயனாளர்கள் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். இதுவரை எப்படி இருந்தீர்களோ அப்படியே இருங்கள். ஆனால் அதை TSU இல் செய்யுங்கள். அதே வேளை விரும்பினால் Facebook Twitterஆகியவற்றினைஇணைத்து விடுங்கள். அதற்கு செற்றிங் பகுதியில் ஏற்பாடுகள் உள்ளன அவ்வளவுதான். நேரம் பொன்னானது அதனை வீணாக்காதீர்கள்.

பணம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் சொந்தப் பெயரில் தான் TSU இல் கணக்கு திறக்க வேண்டும். இது ஒருவகையில் முகமூடிகளை தவிர்க்கும். அத்துடன். இணைய குற்றங்களையும் குறைக்கும் வருமானமும் வந்ததாயிருக்கும். அவசரப்பட்டு பணம் தருவார்கள் என்று பிழையான பெயரில் கணக்கினை திறந்து விடாதீர்கள். பிறகு கிடைக்கும் பணம்எடுக்கமுடியாமல்போகும். TSU இல் கணக்கு திறக்கும் போது தற்போதுள்ள Face book , Teitter கணக்கின் கடவுச் சொற்களை கொடுக்காது இருப்பது நல்லது வேறு கடவுச்சொல் கொடுக்கவும். பிறகு இணைக்கலாம்.

நிச்சயமாக இதனால் வரும் பணம் சாதாரணமாக நாம் வேலை செய்து உழைக்கும் சம்பளத்ததின் 1 வீதத்தினை கூட எட்டுமா என்பது சந்தேகத்திற்குரியது எனவே இதனை ஒரு தொழிலாக கருதவேண்டாம் TSU தமது அறிவுறுத்தலில் பல விடயங்களை கூறியிருக்கிறார்கள். உங்களால் அறிமுகப்படுத் தப்படும் நபர்களால் பகிரப்படும் ஆக்கங்களால் பாதிப்பு ஏற்படுமெனில் இந்த வருமானம் உங்கள் கணக்கில் இருந்து கழிக்கப் படும். அதே வேளை பிரதி பண்ணி பகிரக்கூடாது. வேண்டுமானால் அப்படியே பகிரலாம். ஆக்கங்கள் அதை உருவாக்கியவருக்கே சொந்தமானது அதை பிரதி பண்ணி பகிரக் கூடாது . அதன்மூலம் ஆக்கத்தின் காப்புரிமையினை பாதுகாக்கின்றனர். எனவே தரமான ஆக்கங்கள் பகிர்வுகள் மேட்டுமே பகிர வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துகின்றது. வேறு ஒருவரின் ஆக்கத்தினை அப்படியே பகிர அனுமதிக்கிறது.

அத்துடன் 100 டொலர் சேர்ந்த பின்னரே மீளப்பெறமுடியும். இதற்கு வருடக் கணக்காக லாம். இதை நினைவில் கொள் ளவும். இதன்மூலம் பிரபலங்கள் தான் உண்மையில் கூடுதலான வருமானத்தினை ஈட்ட வாய்ப்பு உள்ளது. இதற்காக மற்றவர்கள் பிரபலமாகமுடியாது என்று இல்லை. நல்லதை செய்தால் யாரும் பிரபலமாகலாம். அதற்காக உலக மக்கள் அனைவரும் TSU இல் இணைந்திருந்தால் மட்டும் பணக்காரராகி விடமுடியாது. இந்த சிறிய வருமானத்தினை உங்கள் நேரத்திற்குரிய மதிப்பாக கருதுங்கள் அவ்வளவு தான்.

அதேவேளை Facebook நல்லதொரு செய்தியை புதுவருடத்தில் தந்தாலும் வியப்பில்லை. எது எப்படியோ இவ்வுலகில் எதுவுமே இலவசமில்லை எல்லாவற்றுக்கும் ஒரு பெறுமதி உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உழைக்காமல் பணம் சம்பாதிக்கமுடியாது.

சிலர் இணையம்மூலம்சம்பாதிக்கலாம் என்று செய்யப்படும் விளம்பரங்களுக்கும் இதற்கும் வித்தியாசமில்லை என்று வாதிடுகின்றனர்.அது உண்மையில்லை. அது வேறு இது வேறு. அது எமக்கு விருப்பமில்லாமல் எமக்கு பயனற்றவற்றினை வேண்டுமென்றே கிளிக் செய்ய வைத்து பணம் ஈட்டும் செயற்பாடு . இது அப்படியல்ல நல்ல விடயங்கள் பகிரப்படுவதன் ஊடாக சிறிதளவை வருமானமாக பெறுவதற்கான வழி. நீங்கள் சமூகவலைத்தளத்தில் செலவழிக்கும் நேரத்தினையும். பணமாக்கும் முயற்சி என்று கூறலாம்

Facebook இல் உள்ள பல வசதிகள் இன்னும் TSU இற்கு வரவில்லை அன்ரொய்ட் அப்ஸ் வந்துவிட்டது. ஐஓஎஸ் அப்ஸ் வர வில்லை. விரைவில் வரலாம். இது ஆரம்பம் எனவே பணத்தினைகுறிவைத்துதொழிற்படாமல் தரமான பகிரல்களுக்கும் முகம் தெரியும் உண்மையான முகவரிகளுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள் ஆரோக்கியமான சமூகவலைத்தளகலாசாரம் வளர்த்தெடுக்கப்படும்.அதற்கு TSU அத்திபாரமாக இருக்கட்டும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதித் தேர்தலில் வடக்கே நிர்ணயிக்கும் தளமாகுமா........?

புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வாக்களிப்பு, நேற்று மாலை நான்கு மணியோடு முடிவுற்றது.

நாட்டின் இருபத்தைந்து நிர்வாக மாவட்டங்களிலும் வாழும் சுமார் 150 லட்சம் வாக்காளர்கள் நேற்றைய தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர். எனினும் அவர்களில் எத்தனை சத வீதமானோர், தமது பிரதான ஜனநாயக உரிமையான வாக்களிப்பில் பங்குகொண்டனர் என்ற புள்ளி விவரம், இப் பத்தி எழுதப்பட்ட மாலை வேளையில், உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை.

ஆயினும் நாடளாவிய மட்டத்தில் 60 சதவீதமான வாக்காளர்கள் தமக்குள்ள பெறுமானம் மிகுந்த உரிமையைத் தக்கவாறு பயன்படுத்தினர் என்று அண்ணளவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

உள்நாடு மற்றும் பல அனைத்துலக நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தேர்தல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தமையினால் –

தேர்தல் வாக்களிப்பு – சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் இடம்பெறும் என்று தேர்தல் ஆணையாளர் கணிப்பிட்டிருந்தார். அவரது உத்தேச எதிர்பார்ப்பு ஓரளவு நேற்று நிறைவேறியது எனலாம்.

தேர்தல் ஆணையாளரும் அவரது அதிகாரிகளும், மக்களுக்கான தமக்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி இருந்தமைகுறைத்துமதிப்பிடக்கூடியதன்று.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில், சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் வாக்காளர்களே வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருப்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது; எதிர்வு கூறப்பட்டது. நேற்றைய வாக்களிப்பு அனேகமாக அந்தப் போக்கிலேயே அமைந்திருந்தது. (எனலாம்).

தமது இறைமை பூரணத்துவமாக இருக்கவேண்டுமெனில், மக்கள் தங்களது மிகப் பெறுமதியான பொன்னான வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்பதனை மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டு, நேற்றைய நாளில் செயற்பட்டிருக்கிறார்கள். அது குறித்து இரண்டு கருத்துக்களோ அன்றி மாற்று நிலைப்பாடுகளோ இருக்க இயலாது.

அரச தரப்பு மற்றும் எதிர்த் தரப்புகளின் தேர்தல் பரப்புரைகள் இரு சாராரும் தமது நிலைப்பாடுகள், திட்டங்கள் குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பதைக் குறைத்து அடுத்தவர் மீது பிழை காணும், தவறு கூறும் உத்தியையே கையாண்டனர்.

எனினும் வாக்காளர்கள் அதனைக் குறையாகக் கொள்ளாமல் பெருந்தன்மையுடன் இரண்டு தரப்பினர்களினதும் நல்ல பக்கங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தமது வாக்குகளை வழங்கி உள்ளனர்.

வாக்களிப்பு நேரம் முடிவுற்ற சில மணித்துளிகளில் வடக்கில் கிடைத்த (உத்தேச) தகவல்களின் பிரகாரம், கடந்த 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைவிட, நேற்றைய தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் அடங்கிய தேர்தல் தொகுதிகளிலும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் அடங்கிய தேர்தல் தொகுதிகளிலும் வாக்களிப்பு வீதம் பிற்பகல் இரண்டு மணிவரை, மிக உயர்ந்து காணப்பட்டது.

முறையே முன்னர் 25.66 சத வீதமாகவும் 40.33 சத வீதமாகவும் இருந்த வாக்களிப்பு நேற்று முறையே 56.5 சதவீதமாகவும், 64.2 சத வீதமாகவும் உயர்ந்து காணப்பட்டது.

முந்தைய தேர்தலை விட இம்முறை ஜனாதிபதித் தேர்வில் வடக்கு வாழ் வாக்காளர்கள், மிகக் கூடுதல் அக்கறையும் கரிசனையும் கொண்டிருந்தனர் என்பதனை மேற்கண்ட புள்ளி விவரம் சுட்டுகிறது.

நேற்றைய ஜனாதிபதித் தேர்தல் க்ளத்தில், பதவியைக் கைப்பற்றும் வேட்பாளர் எவர் என்பது குறித்து, அனேகமாக கடந்த நள்ளிரவுக்குப் பின்னதாகவே தெரியவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அது எதுவாயினும், எவ்வாறாயினும், புதிய ஜனாதிபதி யார் என்பதனை வடக்கு வாழ் தமிழ் வாக்காளர்களே நிர்ணயிப்பார்கள் என முன்னோட்டம் கொள்வதற்கு வாய்ப்பு அதிகம் உண்டு என்பதில் தப்பில்லை அல்லவா?

# உலகெங்கும் பரவும் ஊடக அடக்குமுறை

ராஜ்

ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் என்பன இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது.

பிரான்ஸின் நகைச்சுவை இதழான சார்லி ஹெப்டோவின் அலுவலகங்கள் மீது முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மேலும் ஐந்து பேர் காயமடைந்திருக்கின்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸிலிருந்து வெளிவரும் இந்தச் சஞ்சிகை கடந்த காலங்களில் இஸ்லாமிய வாதிகளால் இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் காலை நடந்தது. முகமூடி அணிந்த ஆயுததாரிகள் அலுவலகக் கட்டடத்திற்குள் நுழைந்து தானியங்கி ஆயுதங்களை வைத்துச் சுடத் தொடங்கினர்.

குறைந்தது 50 குண்டுகள் சுட்டுத் தீர்க்கப்பட்டன என்று செய்திகள் கூறுகின்றன.

தாக்குதலை நடத்தியவர்கள் பின்னர் ஒரு காரில் தப்பியோடிவிட்டனர். கொல்லப்பட்டவர்களில் இருவர் பொலிஸ் அதிகாரிகள் என்று பொலிஸார் கூறினர். தாக்குதலை நடத்திய துப்பாக்கிதாரிகள் இறைதூதரை நிந்தித்ததற்குப் பழி தீர்த்துவிட்டோம் என்று கூக்குரல் எழுப்பியதாகப் பொலிஸார் கூறினர்.

சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலண்டே இந்தச் சஞ்சிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலை மிகக் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கை என்று வர்ணித்தார். பிரான்ஸ் குடியரசால் உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்ட ஊடகவியலாளர்களைப் பயங்கரவாதிகள் கோழைத்தனமாகக் கொன்றிருக்கிறார்கள் என்று அவர் கூறினார்.

வேறு பல பயங்கரவாதத் தாக்குதல்கள் சமீப வாரங்களில் தடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஹொலண்டே கூறினார். தாக்குதலை நடத்தியவர்களைப் பிடிக்கப் பெரும் பொலிஸ் நடவடிக்கை ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

பிரான்ஸ் தலைநகர் முழுவதும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதிபர் பிரான்சுவா ஹொலண்டே இந்தத் தாக்குதல் நடந்த இடத்தைப் பார்வையிட்டார்.

**சர்ச்சையும் சார்லி ஹெப்டோவும்**

தாக்குதலுக்குள்ளான பிரான்ஸ் சஞ்சிகையான, சார்லி ஹெப்டோ ஒரு வார இதழ். இது டென்மார்க் பத்திரிகையொன்றில் முதலில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்திய இறைதூதர் முகமது நபி குறித்த கேலிச் சித்திரங்களை 2006 ஆம் ஆண்டில் மறு பிரசுரம் செய்து சர்ச்சைக்குள்ளானது.

கடந்த 2011ஆம் ஆண்டில், ஷாரியா ஹெப்டோ என்ற தலைப்பின் கீழ், இறைதூதர் முகமது நபியின் கேலிச் சித்திரம் ஒன்றை பிரசுரித்த பின்னர், இந்த சஞ்சிகையின் அலுவலகங்கள் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாயின.

அடுத்த ஆண்டில், பல நாடுகளில் இன்னசன்ஸ் ஒப் முஸ்லிம்ஸ் என்ற படம் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருந்த சூழலில், இந்தச் சஞ்சிகை முகமது நபியை நிர்வாணமாகக் காட்டும் படங்களைப் பிரசுரித்தது. பிரான்ஸின் இனவெறிக்கெதிரான சட்டங்களின் கீழ் இதற்கெதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையிலும், சார்லி ஹெப்டோ சர்ச்சைக்குரிய கேலிச் சித்திரங்கள் பலவற்றைத் தொடர்ந்தும் பிரசுரித்து வந்தது.

**பிரதம ஆசிரியரும் சுட்டுக் கொலை**

தாக்குதலில் சஞ்சிகையின் தலைமை ஆசிரியர் ஸ்டிபன் ஷார்போனியர் உட்பட மிகப் பிரபலமான நான்கு கேலிச் சித்திரக்காரர்கள் கொல்லப்பட்டனர்.47 வயதான சார்போனியருக்கு ஏற்கனவே உயிர் அச்சுறுத்தல்கள் எழுந்ததை அடுத்து அவர் பொலிஸ் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தார்.தாக்குதலில், வொலின்ஸ்கி, காபு, டிக்னூஸ் ஆகிய இந்த மூன்று கேலிச் சித்திரக்காரர்களும் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாகவே இருக்கிறது.

நேரில் கண்டவர்கள் எடுத்த வீடியோக் காட்சிகளில் கறுப்பு உடையணிந்த இரண்டு ஆயுததாரிகள் பாதையோரத்தில் காயமடைந்து விழுந்து கிடக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவரை அணுகும் காட்சி தெரிகிறது. அதில் ஒருவர் அந்த அதிகாரியைத் தலையில் சுடுகிறார். பிறகு இருவரும் பின்புறமாக ஓடி ஒரு கறுப்பு நிறக் காரில் ஏறித் தப்புகிறார்கள். இந்த தாக்குதல்தாரிகள் இந்த இடத்தைவிட்டுத் தப்பியோடிய பின்னர், வேறு காரில் ஏறி தப்பியதாகவும் தெரிகிறது.

தாக்குதலுக்குப் பின்னர், பிரான்ஸில் உள்ள எல்லாப் பத்திரிகை அலுவலகங்களுக்கும் பொலிஸார், பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்துமாறு கோரினர். கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னர் நாட்டில் பல இடங்களில் நடந்த வன் செயல்களை அடுத்து இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல்கள் குறித்து நாட்டில் ஏற்கனவே உஷார் நிலை தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரான்ஸில் நடந்த தாக்குதல்கள் தொடர்பாக பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பிரதமர் மானுவல் வால்ஸ் கூறியிருக்கிறார்.

நகைச்சுவை இதழான , சார்லி ஹெப்டோ மீது நடத்தப்பட்ட துப்பாக்கித் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் இரண்டு சகோதரர்களைத் தேடி வருகின்றனர்.

சேட் அண்ட், ஷெரிப் குவாச்சி ஆகிய இரு சந்தேக நபர்களையும் ஏற்கனவே உளவுத்துறையினர் தெரிந்தே வைத்திருந்தார்கள் என்று வால்ஸ் கூறினார்.

ஷெரிப் குவாச்சி ஈராக்குக்கு ஜிகாத்போராளிகளை அனுப்பியமை தொடர்பான வழக்கொன்றில் ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தார். பிரான்ஸ் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களான இந்த இரண்டு பேருடன் தொடர்புடைய ஏழு பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பிரெஞ்சு உள் துறை அமைச்சகம் தெரிவிக்கிறது.

மூன்றாவது சந்தேக நபர் தான் சம்பவம் நடந்த போது வேறு இடத்தில் இருந்ததாகக் கூறி சரணடைந்திருப்பதாக உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார்.

**மசூதிகள் மீது தாக்குதல்**

பிரான்ஸில் 'சார்லி ஹெப்டோ' இதழ் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, பிரான்ஸின் பல பகுதிகளில் பல மசூதிகள் தாக்கப்பட்டுள்ளதாகப் பிரான்ஸின் நீதித்துறை அதிகாரிகள் கூறுகின்றனர். பரிஸுக்கு மேற்கே லெ மான்ஸ் பகுதியில் உள்ள மசூதி ஒன்று கையெறி குண்டுகளால் தாக்கப்பட்டது. பிரான்ஸில் இந்த சம்பவத்துக்குப் பிறகு தங்கள் சமுதாயத்துக்கு எதிரான எதிர்தாக்குதல்கள் தொடுக்கப்படலாம் என்று அஞ்சுவதாக சில முஸ்லிம் பிரமுகர்கள் கூறியிருக்கின்றனர்.

**ஊடக அச்சுறுத்தல் உலகம் முழுவதும்**

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை உட்பட பல நாடுகளில் ஊடகங்கள் தாக்கப்படுவதும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், கடத்தப்பட்டும், தாக்கப்பட்டும் வருவதும் தொடர்கின்ற நிலையில், தற்போது இந்த அச்சுறுத்தல் உலகளாவிய ரீதியில் பரவி ஐரோப்பிய நாடுகளையும் தொற்றிக் கொண்டுள்ளது. இதனால் ஊடகவியலாளர் பாதுகாப்பு உலகளாவிய ரீதியில் மிகவும் கேள்விக்குரியதொன்றாக மாறிவிட்டது. அதனையே பரிஸ் தாக்குதல் உணர்த்துகின்றது.

தை திங்கள் பொங்கல் திருநாளில்

# புத்தாண்டு சிறப்பு மலர்



## 100 பக்கங்கள்

விலை ரூ.100

பதிவுகளுக்கு 11 ஆம் திகதி வரையே அவகாசம்!

- வடக்கின் முன்னணி எழுத்தாளர்களது சிறுகதைகள்.
- தமிழகத்தின் சிறந்த சிறுகதைகள் சில.
- முன்னணி ஈழத் தமிழ் கவிஞர்களின் கவிதைகள்.
- செவ்வாய் தோஷத்துக்கு என்ன பரிகாரம்?
- அதிர்ஷ்டம் தரும் நவரத்தினங்கள்.
- பெண்ணிய கட்டுரைகள்
- அரசியல் அலசல்கள்
- அரசியல் போட்டிகள்
- விளையாட்டு
- சினிமா போட்டிகள்
- தமிழின் பெருமை.
- விளக்குப் பூசை விரதங்களின் மகிமை.
- புத்தாண்டு பலன்கள்.
- மனையடி சாஸ்திரம்.
- மச்சங்களின் பலன்கள்.
- கைரேகை பலன்கள்.
- உலக அரசியல் அலசல்கள்
- காசி ஆனந்தன் கவிதை.
- அறிவியல் புதினங்கள்.
- நகைச்சுவை விடயங்கள்.

இன்னும் பல சுவாரஸ்ய அம்சங்களுடன்!



சிறப்பிதழுக்கான உங்கள் பதிவுகளுக்கு உதயன் முகவர்களை உடனே நாடுங்கள்!

## உள்ளக இடமாற்ற பட்டியல் தயாரிக்கும் பணி ஆரம்பம்

தென்மராட்சி, ஜன. 9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான உள்ளக இடமாற்றப் பட்டியல் கல்வி வலயத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

வலயத்தைச் சேர்ந்த 160 ஆசிரியர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான இடமாற்றம் பெப்ரவரி 2ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இடமாற்றம் செய்யப்பட்டவர்களின் மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் விரைவில் இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## அரச ஊழியர் வீட்டுத் திட்ட கிராம அபி. சங்க கூட்டம்

வவுனியா, ஜன.9

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கு. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வீதிஅபிவிருத்தி வீடுகட்டுவதற்கான கடன்பெறும்வழிமுறைகள்– புதிய காணிகள் வழங்கல், வீதிகளுக்குமின்விளக்குபொருத்துதல், வீதிகளுக்கு பெயரிடல், ஆலயம் அமைத்தல், வர்த்தக நிலையங்கள் அமைத்தல் உட்படபல்வேறு விடயங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதால் உறுப்பினர்களை இந்த கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (வ-402)

# அமைச்சரின் உத்தரவு உதாசீனம்

### ஒரு வருடமாகியும் கடவை இல்லை

தென்மராட்சி, ஜன. 9

பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்கரயில்கடவை அமைக்குமாறு போக்கு வரத்து அமைச்சர் உத்தரவிட்டு ஒரு வருடமாகியும் இன்னமும் குறித்த ரயில் கடவை அமைக் கப்படாததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி சப்பச்சிமாவடி பிள்ளையார் கோயில் வீதி, ஏ–9 வீதியிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் வரையில் உள்ளது. சுமார் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் தினமும் இந்த வீதியை (மாணவர்கள், அரச உத்தி யோகத்தர்கள், விவசாயிகள்) பயன்படுத்தி வந்தனர். சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சந்தை, வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பிரதேச செயலகம் போன்றவற்றுக்கு குறித்த வீதியையும் இதனுடன் இணைந்த கிளை வீதிகளையும் சேர்ந்த மக்களும் அல்லாரை, கச்சாய் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களும் பயன்படுத்தி வந்தனர். பெருமளவு வாகனங்களும் குறித்த வீதியைப் பயன்படுத்தி வந்தன. முன்னர் ரயில் பாதை இருந்த வேளையில் கடவை இருந்த போதிலும் புதிதாக ரயில் பாதை அமைக்கப்பட்ட போது அந்த வீதிக்கு கடவை அமைக்கப்படவில்லை. இது தொடர்பாக கொழும்பு – கிளிநொச்சி ரயில் சேவை பளை வரைக்கும் நீடிக்கப்பட்டபோது அங்கு வருகை தந்திருந்த போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவிடம் கடவை அமைக்கக்கோரி அப்பகுதி மக்கள் மனுவொன்றைக் கையளித்தனர். குறித்த வீதிக்கு கடவை அமைக்குமாறு அமைச்சர் உத்தரவிட்ட பின்னர் கடவை அமைப்பதற்கு கற்கள் பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட கற்களை சம்பந்தப்பட்ட தரப்பினரே அள்ளிச் செல்ல முற்பட்ட வேளையில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததால் நிறுத்தப்பட்டது. ரயில் சேவை பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரை நீடிக்கப்பட்ட தினத்தன்று மக்கள் வீதியில் ஆர்ப்பாட்டம் செய்தபோது அவ்வழியே வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றார். ரயில்சேவை யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரை நீடிக்கப்பட்ட போதிலும் அந்த வீதியில் நிரந்தரக் கடவை இது வரையில் அமைக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (வ-9)

## பாவற்காய் ஒழுங்கையினது சுத்தம் பேணுவதில் அக்கறை

யாழ்ப்பாணம், ஜன.9

திருநெல்வேலி நாவலடி வீதி, பாவற்காய் ஒழுங்கையில் கழிவுப் பொருள்களைக் கொட்டும் செயற்பாடுகளை அந்தப் பகுதியில் உள்ள மக்கள் நிறுத்திக் கொண்டனர்.

பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள், கிராம அலுவலர் பணிமனை ஆகியவை அமைந்துள்ள குறித்த ஒழுங்கையில் குப்பைகளைக் கொட்டுவதாலும், இறந்த மிருகங்களது உடல்களை வீசுவதாலும் அந்தப் பகுதியில் மக்கள் செல்ல முடியாத சுகாதாரமற்ற சூழ்நிலை காணப்பட்டன. குறிப்பிட்ட பகுதியில் கழிவுப் பொருள்களைப் போடுவதால் ஏற்படும் சிரமங்கள் குறித்து அந்தப்பகுதி கிராமஅலுவலர் எஸ்.மேகானந்தசிவம் மக்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு அறிவுறுத்தியதையடுத்து– குறிப்பிட்ட ஒழுங்கையின் குப்பை கொட்டுவதைத் மக்கள் தவிர்த்தனர். மேலும் அந்தப் பகுதிகளில் உள்ள மதில்களில் கடவுள்களின் உருவப்படங்களை ஒட்டியுள்ளதுடன் இனி மேல் அங்கு குப்பைகளைக் கொட்டாது சுத்தம் பேணிக் கொள்வோம் என்ற வாசகத்தையும் எழுதியுள்ளனர். (வ-7)



## முல்லை மாவட்ட பாடசாலைகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள்

கிளிநொச்சி, ஜன.9

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மாங்குளம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியுதவியூடாக 30 ஆயிரம் லீற்றர் தண்ணீர் கொள்ளக்கூடிய மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

"மாங்குளம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் மழை நீரைச் சேகரித்து குடிதண்ணீராகப் பயன்படுத்தும் வகையில் 30 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட தலா ஒவ்வொரு தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. தலா ஆறு லட்சம் ரூபா செலவில் இந்தத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொரு தொட்டியிலும் முப்பதாயிரம் லீற்றர் மழை நீரைச் சேமித்து வைக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இதனூடாக சேகரிக்கப்படும் மழைநீரை 500 வரையான மாணவர்கள் சுமார் இரண்டரை மாதங்களுக்கு குடிதண்ணீராகப் பயன்படுத்த முடியும். இந்தத் திட்டம் எதிர்காலத்தில் ஏனைய பாடசாலைகளிலும் குடிதண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்படும் என்றும்– சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-55)



யாழ்.வை.எம்.சீ.ஏ.நிறுவனத்தின் முதியோர் தின விழா– நிறுவன பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது 80 முதியோருக்கு உலர் உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகளை நல்லூர் புனித ஜேம்ஸ் தேவாலய பங்குத் தந்தை அருட்பணி என்.ஜே.ஞானகாருண்யன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு வழங்கினார். (வ-9)



## பஸ்ரியன் அடிகளாரின் நினைவுதின நிகழ்வில் குருதிக்கொடை

மன்னார், ஜன.9

வங்காலை பங்குத் தந்தையாக இருந்த போது கொலை செய்யப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாரின் 30 ஆவது நினைவு தினம் செவ்வாய்க்கிழமை வங்காலையில் நினைவு கூரப்பட்டதோடு– குருதிக் கொடை நிகழ்வும் இடம் பெற்றது.

கொலை செய்யப்பட்ட அருட் தந்தை மேரி பஸ்ரியனின் 30 ஆவது நினைவு தினத்தை ஒட்டி வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில் விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வங்காலை புனித அன்னாள் ஆலய மண்டபத்தில் குருதிக் கொடை நிகழ்வும் இடம் பெற்றது.

வங்காலை பங்குத்தந்தை அருட் தந்தை எஸ்.ஜெயபாலன் அடிகளார் குருதிக் கொடையை ஆரம்பித்து வைத்தார். இதன் போது வங்காலை கிராமத்தைச் சேர்ந்த 101 பேர் குருதிக்கொடை வழங்கினர். (வ-56)

# ஜனரஞ்சகம்



## காணாமற் போன பூனை

பாசமுடன் வீட்டில் வளர்க்கப்பட்ட பூனையொன்று காணாமற் போய், அயல் வீட்டாரின் தரைவிரிப்புடன் சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

மன்செஸ்டர் எனும் பகுதியில் வசித்து வரும் குடும்பத்தினர், அல்பஸ் என்ற பூனையை வளர்த்து வந்துள்ளனர். இந்தப் பூனை அயல் வீட்டில் போடப்பட்டிருந்த தரைவிரிப்பில் இருந்து கொண்டு, குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

சாம்பல் மற்றும் வெள்ளை நிறங்களை உடைய இந்தப் பூனை படுத்திருந்த தரைவிரிப்பும் சாம்பல் மற்றும் வெள்ளை நிறங்களை கொண்டிருந்தது. இந்த நிலையில், பூனை தரைவிரிப்பில் இருந்தமை தெரியாமல், பூனையுடன் தரைவிரிப்பைச் சுற்றி தரைவிரிப்பு சுத்தம் செய்யும் இடத்துக்கு அயல் வீட்டார் கொண்டு சென்றுள்ளனர்.

இவ்வாறு தரைவிரிப்புடன் கொண்டு செல்லப்பட்ட பூனையை சுத்தம் செய்யும் நிலையத்தில் வேலை செய்யும் ஊழியர் கண்டு அயல்வீட்டாருக்கு தெரியப்படுத்தினார். அயல் வீட்டில் பூனையை வைத்துக் கொண்டு, ஊரெங்கும் அவர்களது செல்லப் பிராணியான அல்பஸை தேடி அலைந்ததாக, பூனையின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

## எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே



அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் 'பேஸ்புக்' வருகையிலே



இது எப்புடி....!

## ரீசல்ட் ஆ... தம்பி?



வரும்... ஆனா... வராது!

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



பெண்: பரீட்சை நேரத்தில் நாங்கள் தொலைக்காட்சி, வானொலி, கணினி, கைத்தொலைபேசி தொடவே மாட்டோம்...
ஆண்: இவ்வளவு தானா? நாங்கள் புத்தகத்தையே தொட மாட்டோம்...
பெண்:???????

ஆண்: இன்று இரவு நாங்கள் ஊரை விட்டு ஓடிப் போய் விடலாம்...
பெண்: எனக்குத் தனியாக வர பயமா இருக்கிறது....
ஆண்: அப்ப, உன் தங்கச்சியையும் கூட்டிட்டு வா...
பெண்: ?!?....

## தொடரும் சக்தி



சக்தி சின்னத்திரை தொடர் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் முடிவடைவதாக இருந்தது.

இருப்பினும், அந்தத் தொடருக்கு கிடைத்துள்ள வரவேற்பு, மற்றும் டி.ஆர்.பி. ரேட்டிங் என்பவற்றை வைத்து கதையை நீடித்துச் செல்வதற்கு முடிவு செய்திருக்கின்றார்கள். இதற்குரிய வகையில் கதை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்னும் சில மாதங் களுக்கு கதையை நீட்டிச் செல்லும் வகையில், ரசிகர்களுக்கு சலிப்புத் தட்டாத வகையில் கதை மாற்றியமைக்கப்பட்டுள்ளதாம்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பொருளாதார சங்கடங்கள் உருவாகாது. அன்றாடப் பணிகள் சரிவர நடைபெறும். உற்சாகத்துடன் இந்த நாளை கழிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் இடர் ஏற்பட இடமுண்டானதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**இடபம்:** நன்மைகளை அனுபவம் மூலமாக கிடைக்கப் பெறுவீர்கள். உறவினரால் ஒரு தொல்லை ஏற்படலாம். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடலாம்.

**மிதுனம்:** சின்னச் சின்ன வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் மிகவும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். வெளியிடங்களில் எதிர்ப்புகள் அதிகமாக இருக்கும். பணத்துக்குப் பற்றாக்குறை ஏற்படாது.

**கடகம்:** கல்வியில் புதிய மாற்றம் உருவாகும். அரச அனுகூலம் ஏற்படும். செய்யும் உத்தியோகத்தில் இடமாற்றமோ அல்லது பணி நிரந்தரமோ ஏற்படலாம்.

**சிங்கம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

**கன்னி:** முன்விரோதம் காரணமாக சில சங்கடங்கள் உருவாகலாம், என்றாலும் அவற்றை சமாளிக்கும் வழிகள் உங்களுக்கு புலப்படும்.

**துலாம்:** தொழிலில் சிக்கல்கள் உருவாகாது என்றாலும் சிற்சில வாக்குவாதங்கள் இருக்கும். எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இராது. அடுத்தவர்களுடைய விவகாரங்களில் வீணாக தலையிட வேண்டாம்.

**விருச்சிகம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**தனுசு:** பொதுவாக அன்றாடப் பணிகளை கவனித்துக் கொண்டு மிகவும் நிதானமாக இருக்க வேண்டிய நாள். பலவிதமான சூழ்நிலைகளில் உங்களுடைய சாதுர்யத்தால் சமாளிப்பீர்கள்.

**மகரம்:** எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் சச்சரவுகளை நீக்கலாம். ஆசையைக் குறைத்துக் கொண்டு அன்றாடப் பணிகளை சரிவர செய்து வந்தாலே நல்லவிதமான அனுகூலங்கள் உங்களை வந்து சேரும்.

**கும்பம்:** எதிர்காலத்துக்குத் தேவையான உபயோகமுள்ள பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். பகைவர்கள் உங்களுக்கு பணியக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும்.

**மீனம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்த குறிப்பிட்ட நன்மை நடக்கும் நாள். எதிர்பாராத வகையில் பணம் வந்து சேரும். சில தொல்லைகள் தவிர்க்க முடியாமற் போகும்.

# உலகச் செய்திகள்

## மெக்ஸிக்கோவில் 10 பேரின் உடல்கள், தலைகள் மீட்பு



மெக்ஸிக்கோசிட்டி, ஜன. 9

மெக்ஸிக்கோவில் குயரெட்டா மாகாண தலைநகர் சில்பான் சிங்கோவில் போராட்டத்தில் ஈடுபட்ட 43 பயிற்சி ஆசிரியர்கள் கொன்று புதைக்கப்பட்டனர். அதனைத்தொடர்ந்து புதை குழிகளிலிருந்து அழுகிய நிலையில் அவர்களது உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஒருபுதை குழியிலிருந்து மட்டும் 10 உடல்கள் மற்றும் மனிதத் தலைகள் மீட்கப்பட்டுள்ளன. இவை 4 கறுப்பு நிற பைகளில் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தலைமறைவாகியுள்ள இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளவர்களின் உடல்கள் ஏற்கனவே காணாமற்போனவர்களுடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ–ரி)

# பாகிஸ்தான் தாக்குதலுக்கு இந்திய இராணுவம் பதிலடி

## இணை அமைச்சர் ஜிதேந்திரா சிங் தெரிவிப்பு

சென்னை, ஜன. 9

எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு இந்தியத் தரப்பில் 4 மடங்கு பதிலடி கொடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திரா சிங் தெரிவித்துள்ளார். ஜம்மு–காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. இந்திய, இராணுவ நிலைகள் மீது மட்டும் அல்லாமல் எல்லைக் கிராமங்கள் மீதும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டு வருகிறது.

அதனால் எல்லலைக் கிராமங்களை விட்டு 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இந்தநிலையில் பாகிஸ்தானின் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டுக்கும் 4 குண்டுகளால் பதிலடி கொடுக்கப்படுவதாக மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திரா சிங் நேற்று ஜம்முவில் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் இராணுவத் தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்ட கத்துவா பகுதியில் செய்தியாளர்கள் மத்தியில் நேற்று ஜிதேந்திரா சிங் உரையாற்றினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாகிஸ்தான் தாக்குதலுக்கு இந்தியத் தரப்பால் தக்க பதிலடி கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களின் ஒவ்வொரு குண்டுக்கும் 4 குண்டுகள் இந்திய தரப்பில் இருந்து பதிலாக அளிக்கப்படுகிறது. இந்திய இராணுவம் மற்றும் எல்லைப் பகுதி மக்களின் தைரியம், திருப்தியாகவும், பெருமைப்படும் வகையிலும் இருக்கிறது. கிராமங்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதலை உலகம் கவனித்து வருகிறது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதை பாகிஸ்தான் உணர வேண்டும். பழைய நிலைமை தற்போது இல்லை என்பதை அது தெரிந்து கொள்ள வேண்டும். பல ஆண்டுகளுக்கு பிறகு இந்திய இராணுவம் பாகிஸ்தானுக்கு சரியான பதிலடி கொடுத்து வருகிறது என்று அவர் தெரிவித்தார். (ஓ–ரி)

## வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியர்களுக்கு மாநாடு

சென்னை, ஜன.9



மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய தன் நூறாவது ஆண்டு நினைவை முன்னிட்டு குஜராத் மாநிலம் காந்தி நகரில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. அந்த மாநாட்டை பிரதமர் நரேந்திரமோடி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அந்த மாநாட்டில் மோடி தெரிவிக்கையில், இந்தியாவில் உங்களுக்காக ஏராளமான வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. உலகநாடுகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட தலைவர்களை நான் சந்தித்துப் பேசினேன். அவர்கள் பெரும்பாலானோர் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறார்கள். இந்தியாவில் முதலீடு செய்யும் அனைவருக்கும் ஒரேவிதமான சலுகைகள் நிச்சயமாகக் கிடைக்கும்.

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு சிறந்த முதலீட்டு வாய்ப்பாக இந்தியா உள்ளது என்றும் மோடி தெரிவித்தார்

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள அந்த மாநாட்டில், நவீன இந்தியாவின் கண்டுபிடிப்புக்கள், பொருளாதார வளர்ச்சி, தொழிலாளர் பிரச்சினைகள், வர்த்தக வாய்ப்புகள் உட்பட பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில், துணை குடியரசுத் தலைவர் ஹமீதுஅன்சாரி கலந்து கொண்டு, வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)



## தமிழக மீனவர்களின் படகுகளை சேதப்படுத்தி இலங்கைக் கடற்படையினர் அட்டூழியம்

புதுடில்லி, ஜன. 9

கச்சதீவு அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் படகுகலைச் சேதப்படுத்தி இலங்கைகடற்படையினர் அட்டூழியம் புரிந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. 600 க்கும் மேற்பட்ட படகுகளில் 2500 க்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இராமேஸ்வரத்திலிருந்து சென்று கச்சதீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் அங்கே வந்த இலங்லைக் கடற்படையினர், படகுகளில் இருந்த மீன்பிடி இயந்திரங்களைச் சேதப்படுத்தியதுடன் மீன்கலையும் அள்ளிச் சென்றனர். இதனால், ஏராளமான படகுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)



## அதி நவீன அன்ரிபயோடிக் மருந்து கண்டுபிடிப்பு

ஒன்ராரியோ, ஜன. 9

கனடாவின் மெக்மாஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தற்போது பயன்பாட்டில் உள்ள அன்ரிபயோடிக்குகளால் கொல்ல முடியாத மோசமான பக்ரீரியாக்களை அழிக்கும் அதி நவீன அன்ரிபயோடிக் மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர். நிமோனியா மற்றும் இரத்தத் தொற்றுநோய்களுக்கு காரணமாக இருக்கும் அதிநவீன நுண்ணுயிரிகளான என்.டி.எம்.–1 கிருமியை இந்த அன்ரிபயோடிக் செயலிழக்கச் செய்துள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஓ–ரி)

# எயார் ஏசியா விமானத்தின் கறுப்புப்பெட்டியின் ‘சிக்னல்’

## உணரப்பட்டதாகத் தகவல்

ஜாவா கடல் பகுதியில் விபத்துக்குள்ளான எயார் ஏசியா விமானத்தின் கறுப்புப் பெட்டியிலிருந்து சிக்னல் வருவதாக மீட்புப்படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். 11வது நாளாக மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பங்க்லான்பன் கடல் பகுதியில் மோசமான வானிலை நிலவுவதால் கடல் தொடர்ந்தும் கொந்தளிப்பாகக் காணப்படுகிறது. இதனால் பயணிகளின் உடல்களையும், விமானத்தின் கறுப்பு பெட்டியையும், விமானத்தின் சிதைந்த பாகங்களையும் மீட்பதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில் ஜாவா கடல் பகுதியில் 9.8 மீற்றர் நீளம், 1.1 மீற்றர் அகலம், 0.5 மீற்றர் உயரம் கொண்ட எயார் ஏசியா விமானத்தின் வால் பகுதி கடலுக்கு அடியில் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர். ஆனால் அங்கு கடல் கொந்தளிப்பாக காணப் பட்டதால் அதனை மீட்க முடிய வில்லை.


மேலும் விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டால் தான் விமானம் விபத்துக்குள்ளானமைக்கானகாரணம் தெரிய வரும் என்பதால் அதனைத் தேடும் முயற்சியில் இந்தோனேஷிய மீட்புக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

விமானத்தின்கறுப்புப்பெட்டியின் ஆயுள் காலம் 30 நாள் மட்டுமேயாகும். எனவே, அதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் நீர்மூழ்கி வீரர்களும் தீவிரமாக உள்ளனர். இந்த நிலையில் கறுப்புப் பெட்டியிலிருந்து சிக்னல் வெளியானதை உணர்ந்ததாகவும், பின்னர் அது நின்று விட்டதாகவும் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

சிக்னல்வெளியானதைத்தொடர்ந்து கறுப்புப் பெட்டியின் வால்ப் பகுதி விழுந்திருக்கும் பகுதியில் தான் விழுந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் தேடும் பணியை அவர்கள் தீவிரபடுத்தியுள்ளனர்.

## மீளப்பெறப்பட்டது ஜெயலலிதா மீதான வருமானவரி வழக்கு

புதுடில்லி, ஜன. 9



எழும்பூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதான வருமானவரி வழக்குமீளப்பெறப்பட்டுள்ளது. ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதான வருமானவரி வழக்கு சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது, வருமானவரி மீதியை, அபராதத்துடன் செலுத்த ஜெயலலிதா தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை வருமானவரித் துறை ஏற்றுக்கொண்டநிலையில்செலுத்தப்படவேண்டியிருந்த வருமான வரித்தொகையுடன், அபராதமாக 2 கோடிரூபாயும்செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதான வருமானவரி வழக்கு நேற்று மீளப்பெறப்பட்டுள்ளது. (ஓ–ரி)

09 JAN 2015

# பிரான்ஸில் மீண்டும் தாக்குதல்









பாரிஸ், ஜன. 9
பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மீண்டும் நேற்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் பொலிஸார் ஒருவர் காயம்அடைந்ததுள்ளார்.தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

மேலும் பிரான்ஸின் பல பகுதிகளில் பல மசூதிகள் தாக்கப்பட்டுள்ளதாக நீதித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாரிஸுக்கு மேற்கே லெமான்ஸ் பகுதியில் உள்ள மசூதியொன்று கையெறி குண்டுகளால் தாக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு தங்கள் சமுதாயத்துக்கு எதிரான எதிர்த்தாக்குதல்கள் தொடுக்கப்படலாம் என்று அஞ்சுவதாகச் சில முஸ்லிம் பிரமுகர்கள் கூறியிருக்கின்றனர். பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலில் 12 பேர் சாவடைந்துள்ளார்கள், 10 பேர் காயம் அடைந்துள்ளனர்,

இதனையடுத்து பாரிஸ் நகர் முழுதும் பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தீவிரவாத தாக்குதலுக்கு பொறுப்பேற்று சரணடைந்த இளைஞனிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வரும் நிலையில், மீண்டும் பாரிஸ் நகர் அருகே உள்ள மாண்ட்ரோக் நகரத்தில் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



## செவ்வாய்க் கிரகத்தில் கீரை வளர்ப்பதற்கு முயற்சி

செவ்வாய்க் கிரகத்தில் கீரை வளர்ப்பதற்கான முயற்சியில் இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக கீரை விதைகள், தண்ணீர், ஊட்டச்சத்து உரங்கள் ஆகியவற்றைக் கொண்டு சென்று கீரை வளர்ப்பதற்கான ஆய்வுகளை இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கீரையைச் செவ்வாய்க்கிரகத்தில் வளர்ப்பதற்கான திட்டத்துக்கு 'லெட்டூஸ் ஒன் மார்ஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்துக்கு அனுமதிகிடைத்துவிட்டால் செவ்வாய்க் கிரகத்துக்கு கீரை விதைகள் கொண்டு செல்லப்பட்டு கீரை வளர்க்கப்படும் என்று இங்கிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)

## கனடாவில் கடுங்குளிர்
### இரண்டு பேர் சாவு

கனடாவில் கடுங்குளிர் காரணமாக வீடற்ற இருவர் பரிதாபமாய் உயிரிழந்துள்ளனர்.

கனடாவின் ரொறொன்ரோ மாகாணத்தில் இருவர் குளிரால் சாவடைந்ததைத் தொடர்ந்து அங்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ஆண், பெண் இரு பாலாருக்கும் புகலிடங்கள் திறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## உகண்டா ஆயுதக்குழுவின் தளபதி கூட்டுப்படைகளிடம் சரண்

கம்பாலா, ஜன. 9
உகண்டா ஆயுதக் குழுவான 'லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி' யின் மூத்த தளபதியொருவர் அமெரிக்க–ஆபிரிக்கக் கூட்டுப் படைகளிடம்சரணடைந்துள்ளார் என உகண்டா இராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க–ஆபிரிக்கப் படைகளிடம் சரணடைந்த டோமினிக் ஓங்வென் என்ற அந்தத் தளபதி, தற்போது மத்திய ஆபிரிக்கக் குடியரசில் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என உகண்டா இராணுவத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.



அவர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்காக, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் தேடப்பட்டு வந்த ஒருவராவார்.

உகாண்டாவில் இயங்கி வரும் லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மி என்ற அந்தஆயுதக்குழு கடந்த மூன்று தசாப்தங்களாக வன்முறையுடன் கூடிய போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக உகாண்டாவில் சர்வாதிகாரமான முறையில் ஆட்சி நடைபெறுவதாக அவர்கள் குற்றச்சாட்டும் யுவேரி முஸேவினியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர்கள் போராடி வருகின்றனர்.

அதன்போது கூட்டுப் படுகொலைகள் மற்றும் சிறார்களை அடிமைப்படுத்தி போராளிகளாக வைத்திருந்தமை போன்ற பல செயல்களில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது.

அங்கு அவர்கள் தற்போது பலமிழந்துவிட்டாலும், கொங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து அவர்கள் தொடர்ச்சியாக கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

## பிரான்ஸ் பத்திரிகை அலுவலக தாக்குதல்; தீவிரவாதிகளில் ஒருவர் சரண்

பாரிஸ்,ஜன.9
பிரான்ஸின் தலைநகர் பாரிசில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்தில் நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட 3 தீவிரவாதிகளில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக் கொடூர தாக்குதலில் ஈடுபட்ட மூன்று தீவிரவாதிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

தொடர்ந்து தலைமறைவாக இருந்த அந்த மூன்று தீவிரவாதிகளது படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ள நிலையில் அவர்களில் ஒருவரான ஹமீத் மொராட் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (ஒ–ரி)

## அமெரிக்காவை மிரட்டுகிறது வடகொரியா

வொஷிங்டன், ஜன. 9
அமெரிக்கா மீது தாக்குதல் மேற்கொள்ள அணுகுண்டுகளை தயாரிப்பதாகவும் அமெரிக்கா மீது தாக்குதல் மேற்கொள்ளப் போவதாகவும் வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பற்றிய கதையான 'தி இன்டர்வியூ' படத்தை சோனி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வெளியிட்டது.

அந்தப்படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, அமெரிக்காவில் இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளது.

மேலும், தங்களது இணையத் தளத்தையும் முடக்கிக் கொண்ட வடகொரியா, அமெரிக்காவைக் குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவைத் தாக்க அணு குண்டுகளை கிம் ஜாங் உன் தலைமையில் வடகொரியா தயாரித்து வருவதாக தென் கொரியா கூறியுள்ளது.



மேலும், இந்த அணு குண்டுகள் வீசப்பட்டால் கிட்டத்தட்ட அமெரிக்காவின் அனைத்து நகரங்களையும் தாக்கக் கூடிய வகையிலான திறனை சீக்கிரமே வட கொரியா பெற்றுவரும் என்றும் தற்போது 6000 ஹாக்கர்களை கொண்டுள்ள வடகொரியா அமெரிக்காவின் இணையத் தளத்தை முற்றிலுமாக அழிக்கத் திட்டமிட்டுள்ளது எனவும் தென் கொரியா எச்சரித்துள்ளது. (ஒ–ரி)

## மஜிக் நிபுணரின் தலையை துண்டித்த ஐ.எஸ்.ஐ.எஸ்.

சிரியாவில் மஜிக் நிபுணர் ஒருவரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்துப் படுகொலை செய்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றித் தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றது.



இந்த நிலையில் தீவிரவாதிகளின் தலைமையகமாக விளங்கும் சிரியாவின் ரக்கா நகரில் மஜிக் நிபுணர் மக்களுக்கு வித்தைகளை காட்டி மகிழ்வித்துக் கொண்டிருந்தார்.

இதனைப் பார்த்து கடுங்கோபம் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், அவரைக் கைது செய்தனர்.

இதன்பின்னர் இஸ்லாம் மதத்தை அவர் அவமதித்துவிட்டதாக கூறி சாலையின் நடுவே அவரை அழைத்து வந்து தலையைத் துண்டித்துக் கொலை செய்துள்ளனர்.

இதுகுறித்து அந்தப்பகுதியில் இருந்த நபர் ஒருவர் கூறியதாவது:–

அந்த மஜிக் நிபுணர் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வித்தைகள் எதுவும் செய்யவில்லை என்றும், சிறிய தந்திரங்களைச் செய்து காட்டி குழந்தைகளையும் பெரியவர்களையும் மகிழ்வித்தார் எனவும் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

# பல்சுவை

## ஞானச்சுடர்



### ஆன்மிக வாழ்க்கையில் சுயமுயற்சிக்கு முக்கியத்துவம்

ஆன்மிக வாழ்க்கையில் சுயமுயற்சிக்கு முக்கிய இடம் இருக்கிறது. இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். மனித சுயமுயற்சி செய்யாமல் சோம்பியிருந்தால் தெய்வகிருபை இருந்தாலும் அது உரிய பயன் தராது. எனவே இறைவனை நம்புவதோடு சுயமுயற்சியும் கட்டாயம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்ளுவார் என்று முயற்சியே செய்யாமல் சோம்பி இருக்கக் கூடாது. உனக்குத் துணை நீயேதான். மற்றவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணத்தை விட்டு விட்டு உன்னை நீயே உயர்த்தும் முயற்சியில் ஈடுபடு.

உலகில் இன்பம் பெறவோ, சொர்க்க வாழ்வு பெறவோ, நரக தண்டனைகளிலிருந்து தப்புவதற்காகவோ பக்தி செலுத்துபவன் உண்மையான பக்தன் அல்ல. எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் பக்திக்காக பக்தி செலுத்துபவனே உண்மையான பக்தன். இந்தப் பக்தனின் பக்தியே சுத்த பக்தி. இதுவே மேலானது; உயர்வானது; உன்னதமானது; புனிதமானது, இன்பமோ துன்பமோ, வாழ்வோ தாழ்வோ எந்த நிலையிலும் உள்ளத்தில் சமநிலை குலையாமல் சலனமடையாமல் வைத்துக் கொள்வதுதான் யோகமும் ஆன்மிகமும் ஆகும். பயிற்சி பெற்ற யோகியின் மனம் எந்தச் சூழ்நிலையாலும் பாதிக்கப்படுவதில்லை.

## நாளை 2015

**மார்கழி-26 சனிக்கிழமை**

**10.01.2015**

திதி: பஞ்சமி மு.இ.07.57 மணி வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ.09.31 மணிவரை
சுபநேரம்: 03.33-05.03 மணி வரை
இராகுகாலம்: 09.33-11.03 மணி வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | | | | | 1 | | |
| 5 | 1 | | 7 | | | | | 3 |
| | | 8 | | 9 | 2 | | | 4 |
| 4 | 8 | | | 3 | | | 5 | 9 |
| | 2 | | | | | | 3 | |
| 1 | 5 | | | 8 | | | 7 | 2 |
| 3 | | | 4 | 6 | | 2 | | |
| 2 | | | | | 7 | | 4 | 5 |
| | | 5 | | | | | 1 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 1 | 3 |
| 4 | 2 | 5 | 1 | 8 | 3 | 9 | 6 | 7 |
| 1 | 3 | 9 | 6 | 4 | 7 | 5 | 2 | 8 |
| 6 | 1 | 7 | 8 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 8 | 7 | 1 |
| 2 | 4 | 8 | 3 | 7 | 1 | 6 | 9 | 5 |
| 3 | 6 | 4 | 9 | 1 | 8 | 7 | 5 | 2 |
| 7 | 8 | 1 | 2 | 6 | 5 | 3 | 4 | 9 |
| 9 | 5 | 2 | 7 | 3 | 4 | 1 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய நிலைவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 550 | 700 | 500 | 400 |
| நண்டு | 250 | 550 | 350 | 250 | 350 |
| கணவாய் | 450 | 600 | 400 | 400 | – |
| பாரை | 450 | 400 | 400 | 600 | 350 |
| சுறா | 500 | 550 | 600 | 600 | 400 |
| சீலா | 250 | 400 | 350 | 500 | – |
| விளை | 550 | 400 | 400 | 500 | 300 |
| மூரல் | 250 | 350 | 350 | 400 | – |
| கும்பிளா | 350 | 550 | 500 | 300 | – |
| அறக்குளா | 230 | 500 | 400 | – | – |
| ஓரா | 350 | 300 | 400 | – | – |
| திரளி | 150 | 250 | 200 | 200 | – |
| நகரை | 150 | 250 | 200 | – | – |
| ஆடா | 100 | 100 | 120 | 80 | 40 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 100 | – |
| திருக்கை | 100 | 350 | 180 | 150 | 120 |
| பாலை | 350 | 250 | 400 | 400 | – |
| வாளை | – | 150 | 300 | – | 170 |
| கொய் | 70 | 250 | 100 | 100 | – |
| மதனம் | 120 | 200 | 250 | 200 | – |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சரியான பாதையை தெரிவு செய்து குறிக்கோளை அடையுங்கள்

செயலின் பயனில் செலுத்தும் அதேயளவு கவனத்தை அந்தச் செயலைச் செய்யும் நெறியிலும் செலுத்த வேண்டும் என்பது எமது வாழ்க்கையில் நாம் கற்றுள்ள மிக உயர்ந்த பாடங்களில் ஒன்றாகும். எம்மை மிகவும் கவர்வது குறிக்கோளாகும். தோல்வி வரும்போதெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், ஒரு நிகழ்ச்சியின் நெறியில் கவனத்தைச் செலுத்தாததே அந்தத் தோல்விக்குக் காரணம் என்பது புலப்படும். பாதை சரியாக இருந்தால் பயன் வந்தே தீரும். ஆகவே காரணம் காரியத்தை உண்டாக்குகிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம். எனவே ஒரு நெறி பூரணமாகும் போது குறிக்கோளை அடைய முடியும்.

## அத்திப்பழத்தின் மருத்துவம்

அத்திப்பழம் ஆரோக்கியமான, அழகைத் தரக்கூடிய ஊட்டச்சத்து மிக்க பழம் என்று உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அத்திப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது உடல்பருமனைக் கட்டுப்படுத்துகிறது. அத்திப்பழம் உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது. இதற்குக் காரணம் அதில் உள்ள பொட்டாசியச் சத்துத்தான். இதில் உள்ள இரும்புச்சத்து, இரத்த சோகை நோய் ஏற்படாமல் தடுக்கிறது. அதேபோல் கல்சியம் சத்து அதிகம் உள்ளதால் எலும்புத் தேய்மானத்தையும் தடுக்கிறது. இந்தப் பழத்தில் காணப்படும் பொட்டாசியம், சிறுநீரில் ஏற்படக்கூடிய கல்சிய இழப்பைக் குறைக்க உதவுகிறது. எனவே எலும்புகளை வலுவாக்க இருவிதங்களில் செயல் புரிகிறது அத்திப்பழம். அத்தி மர இலைகளைச் சாப்பிட்டு வந்தால் இன்சுலின் சுரப்பு சரியாவதோடு நீரிழிவு நோயில் இருந்தும் விடுபடலாம். இது இதய்நோய் ஏற்படாமலும் தடுக்கிறது. மேலும் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை இது கட்டுப்படுத்துகிறது. நீரில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ப்பொருள் அத்தியில் காணப்படுவதால் மலச்சிக்கல் பிரச்சினைக்கும் இது தீர்வாக அமைகிறது.




## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 80 | 120 | 100 | 80 | 80 |
| கத்தரி | 200 | 160 | 160 | 160 | 140 | 230 | 120 |
| கரட் | 120 | 180 | 240 | 200 | 180 | 240 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 50 | 50 | 25 |
| பயிற்றை | 220 | 240 | 200 | 200 | 240 | 250 | 250 |
| பாகல் | 300 | 300 | 320 | 320 | 300 | 250 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 60 | 100 | 45 |
| பெ.வெங்காயம் | 130 | 100 | 110 | 100 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 120 | 80 | 80 | 80 | 160 | 60 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 35 | 80 | 40 |
| தக்காளி | 160 | 180 | 140 | 200 | 140 | 120 | 90 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 | 80 | 80 | 120 | 80 |
| கீரை | 20 | 60 | 40 | 20 | 40 | 20 | 50 |
| பொன்னாங்காணி | 30 | – | 50 | 70 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 500 | 600 | 480 | 400 | 600 | 650 |
| புடோல் | 120 | 130 | 120 | 120 | 140 | 150 | 120 |
| கோவா | 120 | 120 | 110 | 140 | 120 | 150 | 120 |
| வெண்டி | 180 | 180 | 200 | 140 | 120 | 150 | 120 |
| போஞ்சி | 270 | 320 | 250 | 240 | 280 | 340 | 300 |
| லீக்ஸ் | 280 | 300 | 280 | 280 | 320 | 320 | 300 |
| தேங்காய் | 40 | 40 | 60 | 60 | 40 | 50 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 60 |
| தேசிக்காய் | 50 | 80 | 80 | 80 | 80 | 90 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 320 | 350 | 350 | 350 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 140 | 160 | 180 | 80 |

# சோதிடம்



# உங்களுக்கு எப்படி?



## துலாம்

2015 இல் உங்களின் திட சிந்தனைகளுடன் உங்கள் குறிக்கோள்களை அடைவீர்கள். வருமானத்தை அதிகரிப்பதற்கு நல்ல பல வழிகள் உதயமாகும். நிதி நெருக்கடிகள் ஏற்படா. குடும்பத்திலும் வெளி வட்டாரத்திலும் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உண்டாகும். எப்போதும் போல் சட்டத்தை மதித்து நடப்பீர்கள். இந்தத்தன்மை, சில அன்பர்களுக்கு சாதகமான மேலிடத்துத் தொடர்புகளை உருவாக்கித் தரும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். நீங்கள் சார்ந்துள்ள துறையில் புகழின் உச்சியை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவீர்கள். அதேசமயம் கடினமாக உழைக்க வேண்டிய ஆண்டாக இது அமைகிறது. நண்பர்களின் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். உடலில் இருந்த நோய்கள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

இந்த ஆண்டு எதையும் சிந்தித்துச் செயற்படுவீர்கள். சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக் கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள். பந்தயங்கள், போட்டிகளிலும் வெற்றிவாகை சூடுவீர்கள். பெற்றோர் வழியில் நிலவிவந்த மனக் கஷ்டங்கள் தீர்ந்து, குடும்பத்தில் குதூகலம் நிறையும். நீங்கள் பல தரப்பட்ட மனிதர்களையும் சந்திப்பீர்கள். அதன்மூலம் நீங்களும் பிரபல்யம் ஆவீர்கள். உங்களை நாடி வந்தவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். அதேசமயம் உங்களது பொருளாதாரத் திட்டங்களில் சிறிது தொய்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சில நேரங்களில் மனம் நொந்து போவீர்கள். இருப்பினும் பொருளாதார வீழ்ச்சி என்பது இல்லை.

இந்த ஆண்டு வாகனங்களுக்கு சிறிது பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். உங்களது நண்பர்கள், உங்களுக்குத் தேவையானவற்றைத் தவிர்த்துத் தேவையற்ற விடயங்களைப் பேச நேரிடலாம். அதனால் எவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளாமல், உங்களது தனித் தன்மையை வெளிப்படுத்திச் செயலாற்றுங்கள். உங்களது வாழ்க்கையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவார். தேவையற்ற கவலைகள் உங்கள் மனதை விட்டு அகலும். உங்களின் அணுகுமுறையால் பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்வீர்கள். வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் நண்பர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடுவீர்கள். அதனால் சிற்சில ஆதாயங்களும் ஏற்படும்.

### உத்தியோகத்தர்கள்

உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதேநேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். அந்தச் சமயங்களில் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அலுவலக வேலைகள் தொடர்பான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களது தன்னம்பிக்கை உயரும். எதிர்பாராத பதவி உயர்வால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போவீர்கள்.

### வியாபாரிகள்

வியாபாரிகளுக்கு முயற்சிகளுக்குத் தகுந்த லாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் நிலவிய சிரமங்கள் குறையும். தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்துச் செயல்களிலும் வெற்றியடைவீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர, புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தினாலும் கடன்சுமை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

### கலைஞர்கள்

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் குறைவாகவே இருந்தாலும் பண வரவு சீராகவே தொடரும். ரசிகர்களின் ஆதரவும் அமோகமாகவே இருக்கும். உங்கள் திறமையால் புகழைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். உங்கள் செயல்களில் தனித் திறமையை வெளிப்படுத்தும் ஆண்டாக இது அமைகிறது. இதை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி காணுங்கள்.

### பெண்கள்

பெண்களுக்குக் கணவரின் அன்பும், பாசமும் அளவுக்கதிகமாகவே கிடைக்கும். ஆன்மிகச் சுற்றுலாவும், இன்பச் சுற்றுலாவும் சென்று மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். பிள்ளைகளாலும் சந்தோஷம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.




## கூட்டெண் பலன்கள் 4-6

ராகுவுடன் சுக்கிரன் இணைந்த ஆதிக்கப் பலன் கொண்டவர்கள் இவர்கள். பார்க்க மென்மையான தோற்றத்துடன் இருப்பர். சதைப் பிடிப்புடன் இருப்பர். முடி அடர்ந்தும் செம்பட்டை நிறமாயுமிருக்கும். சிலருக்கு இலேசாக மாறுகண் அமைந்திருக்கலாம்.

தைரியம் உள்ள மகிழ்ச்சியுடன் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பவர்கள். போர் வீரர் போல் சுறுசுறுப்பானவர்கள். இவர்களின் பேச்சு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் பிறரை மகிழ்வுபடுத்துவதாகவும் அமைந்திருக்கும்.

இவர் எந்த விலை கொடுத்தும் தங்கள் மனம் கவர்ந்த பொருள்களை வாங்கி விடுவர். பிறர் மெச்சும்படி ஆடம்பரமாக வசதிகளுடன் வாழ விரும்புவர். காதலில் ஈடுபடுவர்.

முதலில் நோக்கமின்றி அலைந்தாலும் பின்னர் மாறி ஒரு நல்ல தொழிலைப் பிடித்துக் கொள்ளுவர். சிரமங்களில் எதிர்நீச்சலிட்டு முன்னேறுவர். இவர்களுக்கு மனமொத்த துணை அமையும்.

அதிகம் சிரமப்படாத நகை, புடைவை, வியாபாரம் போன்ற துறைகளில் ஈடுபடுவர். கதை, வசனம் எழுதிப் புகழ் பெறுவர். அச்சு, நூலகம், பத்திரிகை, போன்றதுறைகளில் வேலை புரிவர். தையற்காரராக இருப்பர். வெள்ளி, இரும்பு, சம்பந்தப்பட்ட வேலை, தொழில்களிலிருப்பர். வெப்பமான உடல் என்பதால் கட்டிகள், இதயப் பாதிப்பு, தலைவலி, நரம்புப் பலவீனம், சிறுநீரக நோய், நீரிழிவு, உப்புஇரத்தத்தில் மிகும்கோளாறு என்பவை உண்டாகும்.

## கூட்டெண் பலன்கள் 4-7

இந்தஎண் உள்ளவர்களுக்குராகுவுடன் கேது இணைந்த ஆதிக்கப் பலன்உண்டாகும். இவர்கள்சாதாரணமாக உயரமாக இருப்பர். சரியானஉடலமைப்பும் மாநிறத்துடனும் தோற்றமளிப்பர்.

உடல் பலத்துடனும், வளையக் கூடியதாகவும் இருக்கும்.

பொதுவாகவே இவர்கள் சரியான குறும்புக்காரராக, எல்லோருக்கும் நண்பராகவும் இருப்பர். முரட்டுத்தனமான பேச்சும், நடத்தையும் இருந்தாலும் நல்ல அறிவும், ஞானமும் உடையவராக இருப்பார்கள். சட்டம், சம்பிரதாயம், நீதி, நேர்மை எல்லாவற்றுக்கும் அடங்கி நடப்பவராக இருப்பர்.

இவர்கள் எந்தச் செயலையும் பக்குவமாகவும், சிறப்பாகவும் செய்து முடிப்பர். சமையல் கலைகளில்தனித்திறமைவாய்ந்தவராக இருப்பர். இவர்களுக்கு எப்போதும் ஏதாவது சிந்தனை ஓடிக் கொண்டே இருக்கும்.

சாதாரண குடும்பத்தில் பிறந்தவராக இருப்பர். எப்போதும் சுறுசுறுப்புடன் இருப்பர். படிப்பில் சிறந்து விளங்குவர். இவர்களுக்கு காதல் வாழ்க்கை சிறப்பாக அமையாது. நடுவயதுக்குப் பின்பே நல்ல காலம் உண்டாகும். இவர்களுக்குத் திருமணம் தாமதமாகவே ஆகும். குடும்ப வாழ்க்கை பிற்பகுதியில் நிம்மதி தரும்.

கலைகளில் வல்லவரான இவர்கள் எழுத்து, பேச்சு, கவிதை போன்ற துறைகளில் தொழில் தொடங்குவர். பத்திரிகை தொடர்பானவேலைகளைசெய்வர் குறிப்பாக ஆன்மிகப் பத்திரிகையில் இருப்பர் மூலம் போன்ற நோய்கள் தாக்கக் கூடும். வயிற்று உபாதை மற்றும் தலைவலி ஏற்படலாம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29.11.1965

மறைவு
01.01.2013

### துரைச்சாமி சந்திரபாலன்

(பிரபல வெற்றிலை வியாபாரி)

திதி: மார்கழி சங்கடஹரசதுர்த்தி

கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு காற்றில் கலந்து விட்டு
இரண்டு ஆண்டுகள் ஆனதோ! இந்த மண்ணில் உங்களைப் போல்
இனி யாரை நாங்கள் காண்போம் விண்ணில் நட்சத்திரமாய் மின்னும்
பிரிந்த உயிர் என்று பிறர் சொல்லி கேட்டதுண்டு - உங்களை எந்த
விண்மீனாய் எப்போது நாம் காண்போம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர் சார்பாக
கதிரவேலு ஆறுமுகம் சதாசிவம்
(ஓய்வுபெற்ற ஊழியர் - புகையிரதத் திணைக்களம்,
பிரபல சோதிடர்)

2 ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

(53262)(45.3.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"உறுதியாகச் சொல்கிறேன்
நீ இன்று வான் வீட்டில் என்னோடு இருப்பீர்"
(லூக்கா 23:43)

மண்ணில்
05*05*1952

விண்ணில்
09*01*2014



### திருமதி அசெம்ரா பற்குணம்

துன்பமோ! துயரமோ!
யாவற்றையும்
உன்னிலே மறைத்தாய்
அன்பெனும் ஒளியிலே- எமை
நனைய வைத்தாய்
நீ இல்லாத இந்த ஓராண்டு எப்படி
ஓடி மறைந்ததோ....!! அம்மா...!
இன்றும் எம் உள்ளத்தில்
நீ சிரித்துக் கொண்டேயிருக்கிறாய்
எம் இல்லத்தில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறாய்
உன் பாசக்குரல் எம்மருகே
ஒலித்துக்கொண்டேயிருக்கிறது
இறைவனின் மடியில்
உன் ஆன்மா இளைப்பாற
கண்ணீருடன் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(55665)(4.7.3)

# செய்திகள்

## 5 இலங்கையருக்கு இந்தியாவில் சிறை

சென்னை, ஜன.9

ஐந்து இலங்கையர்களுக்கு இந்திய நீதிமன்றத்தால் இரண்டாண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஐந்து இலங்கையர்கள் ஐந்து பிள்ளைகளுடன் இந்தியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்ததாக குற்றம் சுமத்தப்பட்டதுடன், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசித்து அகதி அந்தஸ்து கோரியதாக குறித்த இலங்கையர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு மே மாதம் தனுஷ்கோடி பிரதேசத்துக்கு படகு மூலம் இவர்கள் சென்றடைந்துள்ளனர். இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஒரு ஆண்டு வீதம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை இவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி மாவட்ட நீதிவான் சரவணகுமாரினால் நேற்றுமுன்தினம் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இலங்கையர்கள் கடவுச்சீட்டு சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்பட்டுள்ளனர். தண்டனை விதிக்கப்பட்டபோது குறித்த இலங்கையர்கள் தங்களது பிள்ளைகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பத்து வயதுக்கும் குறைந்த இரண்டு பிள்ளைகள் தங்களது தாய்மாருடன் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்து இவர்கள் இந்தியாவில் அகதி அந்தஸ்துக் கோரியிருந்தனர். (ந)

## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### வல்லிபுரம் இராசமணி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 27.03.1924 — மறைவு 13.01.1993

என்றென்றும் நீங்காத
நினைவுகளுடன்

குடும்பத்தினர்.
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(55586)(45.6.3)



## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நல்லதம்பி சுப்பிரமணியம்**

தோற்றம் 13.12.1925 — மறைவு 27.12.2007

திதி: சங்கடஹர சதுர்த்தி

குடும்ப ஒளி விளக்காய் வாழ்ந்த
தெய்வமே! அப்பா!
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி, பிள்ளைகள்.
(55670)(4.3.7)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆசிரியமணி
### நமசிவாயம் வாதவூரர்
(அளவெட்டி வடக்கு)


வையகத்தில் 10.11.1924 — வானகத்தில் 27.12.1999

திதி: 09.01.2015

அப்பா!
பறந்தோடிப் போனதுவோ பதினைந்து ஆண்டுகள்
பாசத்திற்காய் பாரினிலே ஏங்கி நின்ற உறவுகளை
பாசத்துடன் பௌவியமாய் காத்திட்டீர்
உங்கள் ஆத்ம சாந்தியை வேண்டி நிற்கும் விழுதுகள்

குடும்பத்தினர்.
மாவிலங்கை, அளவெட்டி.

(55676)(45.7.3)



## 4 ஆம் வருட நினைவலைகள்

மண் மகிழ
19 . 03 . 1933



மண் நெகிழ
24 . 12 . 2010

### முருகேசு சின்னத்துரை (இராசையாண்ணை கார்ச்சாரதி)
கோயிலாமனை, கொடிகாமம்

நினைவுகள் அழியவில்லை ஏனென்றால்
நெஞ்சம் மறக்கவில்லை
காயங்கள் ஆறவில்லை ஏனென்றால்?
கனவுகள் ஓயவில்லை
4 வருடங்கள் என்ன நாற்பது வருடம் கடந்தாலும்
உங்களுடன் வாழ்ந்தது பொற்காலமே..

கேஹவாசம்,
கோயிலாமனை,
கொடிகாமம்.
TP:0776365732

குடும்பத்தினர்.

## அமைச்சர் தாக்கியதாக ஐ.தே.க. உறுப்பினர் முறைப்பாடு

கொழும்பு, ஜன.9

வனவள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தம்மை தாக்கியதாக ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

பிபிலை ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணி அமைப்பாளர் புன்சந்த மஹாகும்புர என்பவரே பிபிலை பொலிஸ் நிலையத்தில் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். பட்டாசு கொளுத்தியதற்காக தம்மீது தாக்குதல் நடத்தியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை, மஹாகும்புர தம்மைத் தாக்கியதாக அமைச்சர் விஜயமுனி சொய்சா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந)

செய்திகள்

# சீனாவும் இலங்கையும் இணைந்து விமான சேவை

## அடுத்த மாதம் ஆரம்பிக்குமாம்

கொழும்பு, ஜன.9

இலங்கை சீனாவுடன் இணைந்து விமான சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. அதன் விமானம் எதிர்வரும் பெப்ரவரி 27ஆம் திகதி இலங்கையை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தத் தகவலை யன்ஜு பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டுத் தாபனத்தின் தென்னாசியாவுக்கான தலைவர் நிஹால் அலுவிஹார தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஷிவான் பிராந்தியத்தின் சர்வதேச வர்த்தக மேம்பாடுகள் சபையின் 138 பேர் அடங்கிய தூதுக்குழுவொன்று இலங்கைக்கு வரவிருப்பது தொடர்பாக நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் இலங்கைக்கிடையில் 2015 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை இலக்காகக் கொண்டு முதலீடுகள் மற்றும் வர்த்தக வாய்ப்புக்களில் ஒரு மில் லியன் டொலரைப் பெற்றுக் கொள்வதே இந்த சீனத் தூதுக் குழுவின் வருகை மூலம் எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முதலீடுகளில், நவீன வசதிகள் மற்றும் அரை நவீன வசதிகள் கொண்ட மாடி வீட்டுத் தொடர்கள் தொடர்பாக இருநூறு மில்லியன் டொலரும், சேலைன் உற்பத்தி தொடர்பாக 20 மில்லியன் டொலரும், வத்தளை பிரதேசத்தில் ஹோட்டல் கட்டடத் தொடரொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக 500 மில்லியன் டொலரும் கட்டப்பொருள்கள் உற்பத்தி தொடர்பாக 200 மில்லியன் டொலரும் உள்ளடங்குகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சீனாவின் ஷிவான் பிராந்தியத்தில் யன்ஜு சர்வ தேச வர்த்தக மையத்தில் இலங் கையின் தயாரிப்புகளை காட் சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்கு பிரதான வாயிலை அண்டியதாக 20 விற்பனைச் சாலைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-22)

# நவாலி கலைஞருக்கு மக்களால் கௌரவிப்பு

மானிப்பாய், ஜன.9

வாத்தியக்கலை–மேடைநாடகம்–தனிநடிப்பு–குறுந்திரைப்படம்–திரைப்படம் எனப் பல கலைகளில் தனித்துவமான பாத்திரம் ஏற்று பல்கலைஞராக கலாபூஷணம் விருது பெற்ற லயன் வை.கமலநாதனுக்கு நவாலி மக்கள் ஒன்று கூடி அண்மையில் விருதுகள் வழங்கிக் கௌரவித்தனர். வட்டுக்கோட்டை – யாழ்ப் பாணக் கல்லூரி பழைய மாண வனான வை.கமலநாதன் (பேபி) லேடிரைப்பிஸ்ட் என்ற மேடை நடிப்பூடாக சிறப்புப் பெற்று பல்கலைவேந்தர் என்ற பட்டம் பெற்றவர்.

இவ்வாறு பல்கலைவேந்தர் – நடிகமணி – சமூகமணி – கலாபூஷணம் போன்ற பல் விருதுகளைப் பெற்ற லயன் வை. கமலநாதனின் கலைத்து வத்தைப் பாராட்டி நவாலி ஸ்ரீ.கதிர்காம கந்தன் ஆலய பிரதம குரு சிவத்திரு மாரிமுத்து பத்மநாதன் 'சமூகஞானி' என்ற உயர்விருதை வழங்கிக் கௌரவித்தார்.

நவாலி ஹேமலதா ச.ச.நிலை யத் தலைவர் சமூக சேவைக்கான உயர் விருதை வழங்கிக் கௌரவித்தார்.

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலகர் செல்லத்துரை மகேந்திரன் பொன்னாடை போர்த்தி – பரிசில் வழங்கிக் கௌர வித்தார். தொடர்ந்து ஆலயத்தலைவரின் உரையைத் தொடர்ந்து ஆலய பிரதமகுரு சிவத்திரு மா.பத்ம நாதன் ஆசியுரையை வழங் கினார். கலாபூஷண உயர் விருதை ஆலய பிரதமகுரு வழங்கிக் கௌரவித்தார். (வ-50)

CMK


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**

10.12.2014 புதன்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பக் குலவிளக்கு
அமரர்
**சுந்தரலிங்கம் இராஜேஸ்வரி**
(வல்வை நெசவுசாலையில் பணிபுரிந்தவரும், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவியும்)

தோற்றம் 20.06.1948 மறைவு 10.12.2014





அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**
அன்னார் நோயுற்று இருந்த காலத்தில் அவரை அன்போடு அரவணைத்து வைத்திய உதவிகள் புரிந்த யூாழ் போதனா வைத்திதிய சாலையினருக்கும் மற்றும் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்கள். மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
தொ.பே. 077 931 9434

(55693)(453.7)

கணவர், மகள்மார்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.


# மார்புநோய்க்கான 'எக்ஸ்றே' அறிக்கைக்கு ஆதார மருத்துவமனைக்கு செல்லும் நிலை

தென்மராட்சி,ஜன.9

யாழ்.போதனா மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை அறிக்கை பெற விண்ணப்பிப் போர் மார்புநோய் தொடர்பான எக்ஸ்–றே அறிக்கை பெற ஆதார மருத்துவமனைகளுக்குச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது.

புதிதாக நியமனம் பெறுபவர்களும் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களும் அரச மருத்துவ மனையில் பெறப் பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கை குறிப் பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அரச திணைக்களங்களில் நியமனம் பெறுவோர் தவிர்ந்த வங்கிகள் தனியார் நிறுவனங்கள், உயர் கல்விமாணவர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்றவற்றில் பணிக்கு நியமிக்கப்படுவோர் 500ரூபா மருத்து வமனையில் செலுத்தி மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படல் வேண்டும் யாழ். போதனா மருத்துவமனை, பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற் றுறை ஆகிய ஆதார மருத்துவமனையிலும் மார்பு நோய் அறிக்கை பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரி விலும் பெறப்படல் வேண்டும். தற்போது ஆதார மருத்துவமனையில் எக்ஸ்–றே பிரிவுகள் இயங்குவதால் அங்கேயே மார்புநோய் தொடர்பான எக்ஸ்–றே பிடிக்கப்பட்டு அறிக்கை வழங்கப்படுகிறது.

இந்தநிலையில் அண்மைக்காலமாக யாழ்.போதனா மருத்துவ மனையில் மருத்துவ பரி சோதனை அறிக்கைக்கு விண்ணப்பித்தவர்கள் மார்பு நோய் பரிசோதனைக்காக பண்ணைக்குச் செல்லாமல் ஆதார மருத்துவமனைகளுக்குச் செல் வதைக் காணமுடிகிறது.

ஆதார மருத்துவமனைகள் எக்ஸ்–றே பிரிவில் ஏற்கனவே வேலைப்பளு அதிகமாக உள்ள நிலையில் மருத்துவ பரிசோதனை அறிக்கைக்காக படையெடுப்பதால் அவசர நோயாளர்களுக்கு உடனடி யாக எக்ஸ்–றே எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை, பண்ணை மார்புநோய் சிகிச்சை பிரிவு ஆகியவற்றில் நவீன வசதிகளுடனான எக்ஸ்–றே இயந் திரங்கள் உள்ள போதிலும் முன்னர் மாவட்ட காசநோய்த் தடுப்பு பொறுப் பதிகாரியாக கடமையாற்றியவர் தற்போது போதனா மருத்துவமனையில் கடமை யாற்றுவதாகவும் இந்த நிலையில் மார்பு நோய் அறிக்கை பெற ஆதார மருத்துவமனைகளுக்குச் செல்லுமாறு பணிப்பது குறித்து கவலை தெரிவிக் கப்பட்டது. (வ-9)

## பாலம், மதகு, வீதிகளின் சேத விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஜன.9

அண்மையில் பெய்த மழையால் யாழ். மாவட்டத்தில் பாதிக் கப்பட்ட வீதிகள், மதகுகள், பாலங்கள் போன்றவற்றின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட வீதிகள், மதகுகள், பாலங்கள் ஆகியவற்றின் விவரங்கள், சேத மதிப்பீட்டு விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன் ரைன் ஜக்சீல் அறிவித்துள்ளார். (வ-9)

# விபத்தில் இளைஞர் சாவு

கம்பஹா, மஹவிட பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டவேளை முன்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயன் இன்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டதுடன், கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். (ற)


"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

உயிர் மூச்சு தந்து நின்ற எங்கள் உயிர் அம்மா
உண்மை எனும் தெய்வம் என உதித்த எங்கள் அம்மா
பயிரதுவாம் பாசமது – பரவி எங்கள் வீட்டில்
பண்புடனே தழைத்தோங்கச் செய்த எங்கள் அம்மா
அயலினையும் அன்பதுவால் அணைத்த எங்கள் அம்மா
ஆசிமழை பொழிந்து எம்மை ஆட்சி செய்த அம்மா
தெய்வம் எனும் வடிவில் எங்கள் வீட்டினிலே இருந்தீா
தேடி நிதம் வாடுகிறோம் வந்து எம்மை அணைப்பீா
ஆண்டு ஒன்று சென்றிடினும் அம்மா
உங்கள் உருவை அகத்திலும் புறத்திலும்
அழுதபடி தேடி அழைத்து நிற்கும்
பிள்ளைகளை பார்க்க எப்போ வருவீா?

"ஞான தீபம்"
22/12, பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.





அமரர்
**கமலாதேவி சண்முகநாதன்**
(அம்மாப்பிள்ளை)

பிறப்பு: 13.08.1948
திதி: அபரபக்க சதுர்த்தி (09.01.2015)
இறப்பு: 20.12.2013

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# செய்திகள்

## தென்மராட்சி கல்வி வலயத்தில் 17 மாணவர்களுக்கு '3 ஏ' சித்தி

தென்மராட்சி, ஜன. 9

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் தென் மராட்சி கல்வி வலயத்தில் 17 மாணவர்கள் 3 ஏ தரச் சித்தியையும், 24 மாணவர்கள் 2 ஏ பி தரச் சித்தியையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கலைப்பிரிவில் 6 மாணவர்களும் வணிகப் பிரிவில் 9 மாணவர்களும் கணிதப் பிரிவு, விஞ்ஞானப்பிரிவு ஆகியவற்றில் தலா ஒரு மாணவனும் 3ஏ தரச் சித்தி பெற்றுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு 4 மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு 5 மாணவர்களும் 2013 ஆம் ஆண்டு 6 மாணவர்களும் 2014 ஆம் ஆண்டு 17 மாணவர்களும் 3 ஏ தரச் சித்தி பெற்றுள்ளனர். அதேபோன்று 2011 ஆம் ஆண்டு 11 மாணவர்களும் 2012 ஆம் ஆண்டு 8 மாணவர்களும் 2013 ஆம் ஆண்டு 15 மாணவர்களும் 2014 ஆம் ஆண்டு 24 மாணவர்களும் 2 ஏபி தரச் சித்தியும் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 4 வணிகம் 2 கலை 1 கணிதம் ஆகியவற்றிலும் வரணி மத்திய கல்லூரியில் 3 வணிகம் 2 கலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல் லூரியில் 1 வணிகம் 1 கலை, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் 1 விஞ்ஞானம், உசன் இராமநாதன் ம.வி யில் 1 கலை ஆகிய பிரிவுகளில் மாணவர்கள் 3 ஏ தரசித்தி பெற்றுள்ளனர். இந்த முறை முதற்தடவையாக கிராமப் புறப் பாடசாலைகளில் மாணவர்கள் 3 ஏ தரச் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

வலய ரீதியாக பெறுபேற்று வீதம் கணிதம் – 46.55, விஞ்ஞானம் – 42.62, வணிகம் – 69.89, கலை – 73.5 வலய ரீதியாக ஒட்டுமொத்த வீதம் 66.28 எனத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## சமாதான நீதிவானாக நியமனம்



முல்லைத்தீவு,ஜன.9 முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன் குளத்தைச் சேர்ந்த ஆசிரியை செல்விஇராசையா நளினி சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (வ)

**தவறிவிட்டது**

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகநாதன் என்பவரின் தேசிய அ.அ.(543141739 V) மற்றும் மோட்டார் சைக்கிள் சம்பந்தமான முக்கியமான ஆவணங்கள் GF- 0672உம் அடங்கலாக யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்குமிடையில் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (55690) (45.3.7)

தொ.பே.077 196 6636, 021 225 6018

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS

40அடி அகலம் LED திரையில்

14 முதல்

முற்றிலும் குளிரூட்டப்பட்டது

டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில் சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்

காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30

ஐ

**யாழ்ப்பாணத்தில் 14.03.2015 ல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**

*"IELTS Registration Centre for British Council"*

IELTS

The world speaks IELTS

- Strategies and techniques are taught to gain a higher score
- All 4 skills are paid equal attention
- Special attention to weak students
- 60 hours of learning in 8 weeks
- Affordable charges

- கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்.
- இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

Courses Conducted by University Lecturers

வகுப்புக்கள் 10.01.2015 இல் ஆரம்பம்

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Weeks | 10Weeks |
| Time | 8.00 -11.00 | 7.30-10.00, 5.00 - 7.00 |

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 , 077 880 3887

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இரு குடும்பங்களுக்கு ஏற்ற வசதியுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 076 697 4140 (55694) (4.3)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

கார்கில்ஸ் ஸ்குவெயர் (யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**30ஆம் ஆண்டில் தடம் பதிக்கும் உங்கள் பயிற்சி நிலையம்**

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)





- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 18-01-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-01-2015
திங்கள் காலை 9.30 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

AROD

**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்**
**புதிய கட்டட நிர்மாண வேலைக்கான கூலி கூறுவிலை கோரல்**

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கில் உள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க புதிய கட்டட நிர்மாணத்திற்கான கூறுவிலை கோரப்படுகிறது. எமது நிறுவனத்தில் காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 5.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500/- ஐச் செலுத்திப் படிவத்தைப்பெற்று நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ 23.01.2015 இற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

வைத்திய கலாநிதி என் சிவராஜா
தலைவர் - AROD

(சி.18928) (45.3.7)

# தொடர்ச்சிகள்

## வன்முறைகள் இன்றி முடிந்தது தேர்தல்

### அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் தேர்தல்கள் ஆணையாளர்



கொழும்பு, ஜன.9

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகளின்றி அமைதியான முறையில் இடம்பெற்றது எனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தலை சுமுகமாக நடத்தி முடிப்பதற்கு உதவி வழங்கிய வாக்காளர்கள், வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர், தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

நேற்றுக் காலை 7 மணிமுதல் மாலை 5 மணி வரை சிறு சம்பவங்கள் தொடர்பில் 328 முறைப்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தின் தேர்தல் கண்காணிப்பு பிரிவுக்குக் கிடைத்துள்ளன என்றும் தெரிவித்தார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும், தெரிவித்தவை வருமாறு:–

தேர்தல் சுமுகமாக நடந்து முடிந்துள்ளது. இதற்கு ஆதரவளித்த அனைத்து தரப்பினருக்கும் நான் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிப்பேன். இருப்பினும், தற்போது அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின் றேன்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திலுள்ள தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் 63 முறைப்பாடுகளும்,மு.ப.11மணி வரை 117 முறைப்பாடுகளும்,ந.ப. 12 மணி வரை 161 முறைப்பாடுகளும், பி.ப.ஒரு மணிவரை 223 முறைப் பாடுகளும், 2 மணிவரை 245 முறைப்பாடுகளும், பி.ப.3 மணிவரை 251 முறைப்பாடுகளும், மாலை4 மணிவரை 311 முறைப்பாடுகளும், 5 மணி வரை 328 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளில் வன்முறை, அச்சுறுத்தல்கள் தொடர்பில் குறைந்தளவு முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன. வாக்களிப்பு நிலையங்களில் பென்சில் பாவனை, பேனா பாவனை என்பவை தொடர்பிலே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தவிர அனைத்து இடங்களிலும், பெரியளவில் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. அத்துடன், அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாக மாவட்ட தெரிவத்தாட்சி அத்தியட்சகரிட மிருந்தோ, ஊடகங்களிடமிருந்தோ, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளிடமிருந்தோ எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

வாக்குப் பெட்டி மாற்றப்படும் என்று தற்போதும் எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. வாக்குப் பெட்டியை மாற்ற முடியாது. அவ்வாறு கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். மேலும், வாக்களிப்பு வீதம் குறித்து சரியாகக் குறிப்பிட முடியாது. வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டதன் பின்னரே எந்தளை வீத வாக்குப் பதிவு இடம்பெற்றது எனக் கூற முடியும்.

இதேவேளை– தேர்தல் முடிவுகளை அறிவிப்பது தொடர்பான நேரத்தை உறுதியாகக் கூற முடியாது. தபால் மூல வாக்குகளை இன்றிரவு (நேற்று) இரவு10மணிக்குமுன்னர் அறிவிக்க எதிர்பார்க்கின்றோம். அத்துடன், ஏனைய முடிவுகளை நாளை (இன்று) காலை அல்லது நண்பகல் அல்லது இரவுக்கு முன்னர் அறிவிக்க எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

(ந–சி)




சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்மாள் ஆலய வருடாந்த தைப்பொங்கல் பெருவிழா

நேற்று (08.01.2015) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15.01.2015 வியாழக்கிழமை தீ மிதிப்பு நிகழ்வுடன் நிறைவுபெறுகின்றது.

முதலாம் நாள் திருவிழாவின் உபயகாரர் சுவிஸ்லாந்தில் வசிப்பவரும், கீரிமலை வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கொண்ட இ. கணேசரத்தினம் குடும்பம் மிகவும் சிறப்பான முறையில், பக்திபூர்வமாக கொண்டாடி உள்ளனர்.

இந்தக் கிரியைகளைச் சிறப்புற நிகழ்த்துபவராக ஆலய பிரதம சித்தஞானகுரு இந்திரன் ஐயா உள்ளார்.

மேற்படி திருவிழா நாள்களில் அடியார்கள், பக்தர்கள் கலந்து அம்பாளின் திருவருளைப் பெறுமாறு ஆலய பிரதம ஞானகுரு கேட்டுள்ளனர்.

தகவல்: இந்திரன் ஐயா,
ஆலய சித்தஞானகுரு

(55697) (45.3.7)

O/L , A/L இன் பின்னர்.. கணினி டிப்ளோமா கற்கை நெறிகள்

Diploma in Information Technology DiTec
Diploma in Office Automation DOA
Diploma in Pc Applications DPCA
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip.in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
Tally, JAVA, c++, AutoCAD

DMI COMPUTER EDUCATION



75% OFF

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட திறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு II- 12/1/2015 9.30 am
பிரிவு III - 17/1/2015 9.30 am

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113. கன்னாதிட்டி வீதி, (சுபாஸ் ஹோட்டல் அருகாமை) | M.M.V. வீதி, | No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) | No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel. : 021-226 2470 | Tel. : 021-227 0775 | Tel. : 021-224 1970 |

After O/Levels

சர்வதேசதரம் வாய்ந்த இரட்டை டிப்ளோமா கற்கைநெறி 4 மாதங்களில்




IT + ENGLISH

எதிர்கால தொழில்வாய்ப்பிற்கு அத்தியாவசிய திறன்கள்

Diploma in Information Technology
Duration : 4 Months
Course Fee : Rs. 24,500

Diploma in English
Duration : 4 Months
Course Fee : Rs. 19,500

பதிவுகளை மார்கழி 31st திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்

சேமிப்பு Rs. 15,875

Dual Diploma Usual Price Rs. 44,000

Dual Diploma With Discount Rs. 28,125

25% off for the 1st Diploma 50% off for the 2nd Diploma

*Conditions Apply

SMS your Details to
Jaffna : 077 309 9 308
Kilinochchi : 077 55 888 95

New Batches
New 12 JAN 2015

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

முன்பள்ளி ஆசிரியர் தேவை

அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிக்கு ஆங்கில அறிவுள்ள முன்பள்ளி ஆசிரியர் உடனடியாகத் தேவை. தகுதியானவர்கள் அரியாலை சனசமூக நிலையத்துக்கு சுயவிவரக் கோவையுடன் 11.01.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

நிர்வாகம்,
அ.ச.ச.நி., 185, புங்கன்குளம் வீதி, அரியாலை.
தொடர்புகளுக்கு 077 6453862, 077 610 2405

மதுரா அழகு கலைப் பயிற்சி நிலையம்
[கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில்]



புதிய பிரிவுகள் ஆரம்பம்(10.01.2015)
மிகக் குறைந்த கட்டணம் நிறைந்த பயிற்சிகள்
பயிற்சிக்காலம் - 3 மாதம், 1 மாதம் தொழிற்பயிற்சிக்கட்டணம் 20000/-
டிப்ளோமா கோர்ஸ் - 9000/-
மேக்கப் 6 வகை (எயா பிரஷணர் மேக்கப்)
பிறைடல் டிரெஸ்சிங் - 5 வகை, 20 பேசியல்
மெசினறி ட்றீட்மென்ட் - 10வகை, றீ பொன்டிங்
ஸ்ரெயின்ட்னிங், பேமிங் - 10, கேளிங்5
ஹெயர் கட்டிங் 5, நெயில் ஆட், ஸ்பாட்றீட்மென்ட், பிம்பிள்றீட்மென்ட், பெடிக்கியூர், மெனிக்கியூர், திரெட்டிங், வக்ஸிங், கிறியேட்டிவ் மேக், பிம்பிள் றீட்டிமென்ட், ஹெயார்ஸ் ரைலிங், ஹெயாகலறிங்.
பயிற்ச்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
தையல், சாறிவேக், கேக் 30, ஜசிங் 35, கான்ட்வேர்க் ஆகிய பயிற்ச்சிகளும் நடைபெறும்.
(இடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்)
தொடர்பு மகளிர் மட்டும்-
077 936 2642
பழையவீதி, கோப்பாய்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# செய்திகள்

## அரச ஊடக அலுவலகத்துக்குள் திடீரென நுழைந்தார் தேசப்பிரிய

### சஜித்துக்கு எதிரான பொய்ப் பரப்புரையை தடுத்து நிறுத்தி மறுப்பை வெளியிட்டார்

கொழும்பு, ஜன. 9

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்பில் பொய்ப் பரப்புரை மேற்கொண்ட அரச ஊடகத்தினுள் நேற்றுக்காலைதிடீரெனதேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உள்நுழைந்து, குறித்த செய்தி தொடர்பில் திருத் தத்தை வெளியிடப் பணித்துள்ளார்.

அதற்கமைய மேற்படி செய்திக் கான தனது மன்னிப்பைக் கோரி, சரியான செய்தியை குறித்த அரச ஊடகம் பின்னர் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதாகச் செய்தி ஒளிபரப்பாகியது. ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு நாளான நேற்றுக் காலை இந்தச் செய்தி ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது.

'ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதாகப் போலிப் பரப்புரை செய்யப்படுகிறது. இதனை திருத்தம் செய்து சரியான செய்தியை ஒளிபரப்ப வேண்டும்' என்று சஜித் பிரேமதாச, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரியவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தச் செய்தி போலியானது எனவும், தீர்மானமிக்க நேரத்தில் இவ்வாறு போலிச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் சஜித் முறைப்பாடு செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் நேரடியாக அரச ஊடகத்துக்குச் சென்று செய்தி ஒளிபரப்பை நிறுத்து மாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவுக்கு அமைய குறித்த செய்தி திருத்தி சஜித் கட்சித் தாவவில்லை என்று ஒளி பரப்புச் செய்யப்பட்டது. (த-5)

## மரண அறிவித்தல்கள்



### கனகர் குமாரசாமி (ஆச்சாரியார்)

(சிரேஷ்ட கணக்காளர் இந்தியன் ஓவசீயஸ் பாங்-கொழும்பு)

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட கனகர் குமாரசாமி (06.01.2015) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-மீனாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், தேவிகா, தேவகி, மணிவண்ணன், கமலவண்ணன் (கமல்), கலைச்செல்வன் (அருள்) உமா, பூரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோன்மணி, செல்வராஜா (சிற்பாசாரியார்), கமலராஜா ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ), குணரத்தினம், செல்வதி உமையாள் (ரதி), சகுந்தலா, பத்மலோஜினி, பாலகிருஷ்ணா, சொர்ணபாலா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் புவனேஸ்வரி, தேவராணி, ஜெயலக்சுமி (தேவி), சிவசுப்பிரமணியம் (சிவபாலன்), காலஞ்சென்ற தவபாலன் (தவம்) மற்றும் இந்திராணி, பத்மராணி, புஸ்பராணி, விஜயராணி, ஜெயபாலன், சண்முகபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிராமி, மீனா,பிரசாந், லக்ஸ்மி, அர்ச்சனா, கீர்த்தனன், அட்ஷயா, ஆதவன், கணன், அஷ்வினி, அருணன், அபினேஷ், மதுரன், ஜொஆன், ஆதித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

**குறிப்பு:** அம்மன் வீதி, திருநெல்வேலியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி, திருநெல்வேலி.**
T.P: 0774741933,
0019057945713 (கனடா)

**தகவல்:**
**தவம் பத்மசீலன் மற்றும் உறவினர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை பத்திநாதர்

(நிதுஷா மல்ரி சென்ரர் (முன்னாள் உரிமையாளர்)



சில்லாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.60A, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை பத்திநாதர் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை- அக்னேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபமாலை- ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி அருளம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மேரி லூட்ஸ் (யஸ்மின்) மற்றும் கவிஸ்ரன் (அமெரிக்கா), மேரி இமெல்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியயோசப் வில்பிரட், திருமதி மேரி நிஷாந்தினி (அமெ ரிக்கா), அன்பனவன் ஆகியோரின் அன்பு மாமனும், அன்றியாவின் அன்புப் பேரனும், அல்பிறட் (பிரான்ஸ்), கென்றி (ஓய்வுநிலை உதவி பிரதேச முகாமையாளர்- மக்கள் வங்கி), யேசுதாசன் (முன்னாள் நிதுஷா மல்ரி சென்ரர் உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பழையபூங்கா வீதியிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, சில்லாலை வடக்கு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3 மணியளவில் சில்லாலை தூய யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்பு யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 60A, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே:** 021 2226010

## மைத்திரியின் இணைப்பாளர் வன்னியில் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 09

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் கறுப்பையா ஜெயக்குமார் நேற்றையதினம் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

எதிரணியின் சார்பில் வாக்குச் சாவடிகளைக் கண்காணிக்கும் கடமையில் அமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு உணவுகள் மற்றும் சிற்றுண்டிகளை வழங்குவதற்காகச் சென்ற ஜெயக்குமார், ஆளும் கட்சியினால் வாக்குச் சாவடிகளை கண்காணிக்க நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கு இடையூறு செய்கிறார் என ஆளும் கட்சிப் பணியாளர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் முற்பகல் 10.30 மணிக்குக் கைது செய்யப்பட்டார். 5 மணி நேர விசாரணையின் பின்னர் அவர் எதிரணியின் இணைப்பாளர் என நிரூபித்ததைத் தொடர்ந்து பிற்பகல் 3.20 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக ஜெயக்குமாரைத் தொடர்புகொண்டு கேட்ட போது, 'கடமையில் இருந்த ஆளும் கட்சிப் பணியாளர்களுக்கு என்னைப் பொது எதிரணியின் இணைப்பாளர் என நன்றாகத் தெரியும். என்னைப் பழிவாங்குவதற்காகவே அவர்கள் இவ்வாறு ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். ஆனால் 5 மணிநேர விசாரணையின் பின்பு என்னை பொலிஸார் விடுதலை செய்தனர்-என்றார். (த-ரி)

### திருமதி அன்னம்மா சிவக்கொழுந்து

நவாலி தெற்கு, மானிப்பாய்.



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிவக்கொழுந்து நேற்று (08.01.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற திருமதி நாகரஞ்சினி - யோகச்செல்வன், சிவராஜன் (அஞ்சல் அலுவலகம் மானிப்பாய்), திருமதி ஜெயந்தி தவநேசன் (ஆசிரியை யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயும், யோகச்செல்வன், தவநேசன் (ஆசிரியர் யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும், அம்பிகேஷன், சுந்தரேசன், மாதங்கி, பிரியங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நல்லையா செல்வநாயகம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி தெற்கு ஊரியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். (சி19004)(12.3.7)

தகவல்:
சி.சிவராஜன் - மகன்

### திருமதி அழகரத்தினம் தியாகராஜா



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகரத்தினம் தியாகராஜா நேற்று (08.01.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா கனகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராசா(Sk) அவர்களின் அன்பு மனைவியும், செல்வராணி காலஞ்சென்ற நவநீதன் மற்றும் தங்கராணி, புஸ்பராணி, ஜெகநீதன், யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தயாபரன், சர்வேஸ்வரி, பூபாலசிங்கம், இராஜசிங்கம், சியாமளா, ஸ்ரீராஜபாலன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராமமூர்த்தி, இராஜதுரை, கமலாம்பிகை, சிவஞானம், மகேஸ்வரி ஆகி யோரின் சகோதரியும் Dr.யசோதா, பார்த்தீபன், குருபரன், அபிராமி, ஆரணி, துர்க்காதிபனா, குருதேவன், உமாசுதன், பகீரதன், மோகனரூபன், றாகவி, புராதனி, றாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**30, நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி. 021 300 8477**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# தொடர்ச்சிகள்

## வடக்கில் மைத்திரிக்கு

இரவு நேரத்தில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் வழக்கமான சைக்கிள் ரோந்து நடவடிக்கைகள் கூட கடந்த ஓரிரு இரவுகளாக முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன.

இத்தகைய நிலையில் நடைபெற்று முடிந்த வடபகுதியின் வாக்களிப்பில் 60 வீதமான மக்கள் தமது வாக்குகளை செலுத்தியிருந்தனர். அவற்றில் மிகப் பெரும்பாலான வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக போடப்பட்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் அனைத்திலும் மைத்திரிபால சிறிசேனவுக்கே மிகப் பெரும்பாலானோர் வாக்களித்துள்ளனர். இன்று அதிகாலை இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் கிடைக்கப்பெற்ற உத்தியோக ரீதியிலான முடிவுகளின்படி யாழ். தேர்தல் மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பில் மைத்திரிக்கு ஆதரவாக 10 ஆயிரத்து 893 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதரவாக 4 ஆயிரத்து 596 வாக்கு களும் அளிக்கப்பட்டிருந்தன. வன்னி தேர்தல் மாவட்ட தபால் மூல வாக்களிப்பில் மைத்திரிக்கு ஆதரவாக 5 ஆயிரத்து 976 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதர வாக 2 ஆயிரத்து 285 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மைத்திரிக்கு ஆதரவாக 38 ஆயிரத்து 856 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதரவாக 13 ஆயிரத்து 300 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. யாழ்ப் பாணத்தில் பருத்தித்துறைத் தொகுதியில் மைத்திரிக்கு ஆதரவாக 17 ஆயிரத்து 388 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதரவாக 4 ஆயிரத்து 262 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. மானிப்பாய் தொகுதியில் மைத்திரிக்கு ஆதரவாக 27 ஆயிரத்து 958 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதர வாக 7 ஆயிரத்து 225 வாக்குகளும், உடுப்பிட்டித் தொகுதியில் மைத்திரிக்கு ஆதரவாக 18 ஆயிரத்து 119 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதரவாக 3 ஆயிரத்து 837 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவு மாவட்டத் தில் மைத்திரிக்கு ஆதரவாக 32 ஆயிரத்து 650 வாக்குகளும், மஹிந்தவுக்கு ஆதரவாக 7 ஆயிரத்து 950 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

(உ–த,ற,5,4,21,23,86,ரி,426,402,421)

## வடக்கில் கைக்குண்டு

இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. பாழடைந்த வீட்டின் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குண்டினை வீசி எறிந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்துக்கு அண்மையில் மதியம் 2.30 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதன் போது வாக்களிப்பு நிலையத்திற்கு பின்பாகவுள்ள மைதானத்திலேயே அது வீழ்ந்து வெடித்துள்ளது.

வவுனியாவில் மாலை 3.30 மணியளவில், வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தின் வாசல் பகுதியை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இருப்பினும் அது வெடிக்க வில்லை. இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரும், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் வந்து அதனை செயலிழக்கச் செய்தனர். அதனால் வாக்களிப்பு முடிந்த போதும், வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

(ற–5–109–422–402)

## வடக்கில் மக்கள்

முறையாக வாக்களிக்கும் இளைஞர்–யுவதிகள் காலையிலேயே சென்று வாக் களித்தனர்.

அதற்கு மேலாக, தேர்தல்கள் திணைக் களம் நேற்றைய தினமும் மக்களின் வாக்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்தது. வாக்களிப்பது மக்கள் உரிமை என்றும், அச்சுறுத்தல் இன்றி மக்கள் வாக்களிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது. வடக்கின் 5 மாவட்டங்களிலுமே, தேர்தல்கள் திணைக் களம் இந்த நடவடிக்கையை மேற் கொண்டிருந்தது. அதனால் மதியம் மற்றும் மாலை வேளையில் வாக்களிப்பில் அதிகரிப்பு காணப்பட்டது.

(ற–5–17–86–9–29)

## அமைதியான

என்பதுடன், கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் எதுவும் இந்தத் தேர்தலில் ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் அதிகளவிலான மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

(ற–5)

## மாவட்ட

யாழ்ப்பாணம் 65 வீதம், வவுனியா 66 வீதம், கிளிநொச்சி 64 வீதம், முல்லைத்தீவு 73 வீதம், மன்னார் 68 வீதம், திருகோணமலை 72 வீதம், அம்பாறை 70 வீதம், மட்டக்களப்பு 60 வீதம், கண்டி 75 வீதம், மாத்தளை 75 வீதம், காலி 79 வீதம், இரத்தினபுரி 84 வீதம், கேகாலை 75 வீதம், நுவரெலியா 80 வீதம், களுத்துறை 70 வீதம், மாத்தறை 76 வீதம், அம்பாந்தோட்டை 70 வீதம், புத்தளம் 78 வீதம், மொனராகலை 75 வீதம், பொலன்னறுவை 80 வீதம், கம்பஹா 65 வீதம், கொழும்பு 75 வீதம், பதுளை 61, அனுராதபுரம் 76 வீதம், குருநாகல் 77 வீதம் – எனவும் வாக் குகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ற–4)

## போலி

வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. இரு இடங்களில் போலியான வாக்குச் சீட்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

காலி, உடுகம பிரதேசத்தில் சந்தைக்கத்துக்கு இடமான முறையில் சென்ற முச்சக்கர வண்டி ஒன்றை பொலிஸார் மறித்து சோதனையிட்டுள்ளனர். அதன் போது அதிலிருந்து பெருமளவு போலியான வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை, ஒரு வேட்பாளருக்குப் புள்ளடி இடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மத்துகம, நாரா வல கனிஷ்ட வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட புள்ளடியிடப்பட்ட 155 வாக்குச்சீட்டுக்கள், 'கப்' ரக வாகனமொன்றுடன் மீட்கப்பட்டுள்ளது. அவற்றைக் கொண்டு சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


(ற–5)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### தங்கராசா ஜெயராசா

(ஜெயராசா படமாட உரிமையாளர்)



ஒடக்கரை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஜெயராசா நேற்று (08.01.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா–வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாதேவன்–சுந்தரச்செல்வம் தம்பதியரின் அன்பு மருமகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், ரம்யா, ஜனஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபானந்தின் அன்பு மாமனும், சிவராசா, சௌந்தரராசா, ஈஸ்வரியம்மாள், காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரதேவன், கௌரிதேவி, குமாரதேவன் காலஞ்சென்றவர்களான ஞானதேவன், வாசுதேவன் மற்றும் வச்சலாதேவி, விஷ்ணுதேவன், வாமதேவன், பிருந்தாதேவி, பாமினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒடக்கரை, பருத்தித்துறை.
தொ.பே: 077 979-1046

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
04 . 08 . 1937



ஆண்டவன் அடியில்
08 . 01 . 2015

### கந்தையா முருகேசு

யாழ்.வடமராட்சி இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தையா முருகேசு நேற்று (08.01.2015) வியாழக்கிழமை அதிகாலை இறைவன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் முன்னாள் வவுனியா, பருத்தித்துறை இலங்கை மின்சாரசபை (CEB) ஊழியரும் காலஞ்சென்றவர்களான கந்தையா – மீனாட்ஷி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்வர்களான வேலுப்பிள்ளை – சின்னமணி தங்கமுத்து (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வள்ளிப்பிள்ளை, சுந்தரம்(மலேசியா), காலஞ்சென்ற துரை ஆகியோரின் மைத்துனனும், நாகேஸ்வரி, நாகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), சிவகுமார்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சிவபாதசுந்தரம், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மஞ்சுளா, சுதா ஆகியோரின் அன்பு மாமனும், யசோதரன் (லண்டன்), கஜேந்திரன், சுபேந்திரன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கார்த்திகா, மீரா, கௌசிகன், ஜோர்ஜா, தனுஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.01.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளன்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வேலுப்பிள்ளை - நாகேஸ்வரன் (ஆஸ்திரேலியா).

(54166)(12.7)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு கணநாதன்

(தம்பித்துரை - கணன்)



பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது தென்ஆபிரிக்கா மலாவியில் வசித்தவருமான திருநாவுக்கரசு கணநாதன் (07.01.2015) புதன் கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு மற்றும் காலஞ்சென்ற இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற தட்ச ணாமூர்த்தி மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பவதியின் (ஆசிரியை யா/விக்கினேஸ்வரா வித்தியாலயம்) கணவரும் க.தேனுகா (யா/இந்து மகளிர் கல்லூரி தரம் 9) க.நிருத்திகன் (யா/மத்திய கல்லூரி தரம்7) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

45/14 நாயன்மார் வீதி
நல்லூர் யாழ்ப்பாணம்.

021 222 6549
075 045 4852

தகவல்:
குடும்பத்தினர்

# பதிவுகள்

## நேற்றைய ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக திரண்ட வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம்









வவுனியா








மன்னார்








நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பின்போது குடாநாட்டில் தேர்தல் விதிமுறையை மீறிய சந்தர்ப்பங்கள்








# பதிவுகள்


பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி பாலசிறிசேன


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ


எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க


நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா


அமைச்சர் விமல் வீரவன்ஸ


திருகோணமலை நகர பிதா க. செல்வராஜா


வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்


நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்


நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்


நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன்.ரிஸ்கான் பதியுதீன்


நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்


நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்


கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் தண்டாயுதபாணி

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கச் சென்ற ஜனாதிபதி வேட்பாளர்கள், எதிர்க்கட்சித் தலைவர், கட்சி உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்கள்.

# ஒரு பந்தில் ஏழு ஓட்டங்கள் பிராத்வெய்ட் உலக சாதனை



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிரேக் பிராத்வெய்ட் ஒரே ஒரு பந்தில் உலக சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்கா– மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி நியூலேன்ட்ஸ் மைதானத்தில் நடந்தது. அந்தப் போட்டியில் தான் இந்த சுவாரஸ்யமான உலக சாதனை அரங்கேறியது.

தனக்கு வந்த பந்தை வேகமாக அடித்து விரட்டிய பிராத்வெய்ட், உடனடியாக ஓட்டங்கள் எடுக்க ஓடினார். அப்படி ஓடியே 3 ஓட்டங்களை எடுத்து விட்டார்.

அந்த சமயம் பந்தை வசப்படுத்திய தென்னாபிரிக்க இலக்குக் காப்பாளர் எப் டிவில்லியர்ஸ் அதை ஸ்டம்ப்பை நோக்கி வீசினார்.

சற்று வேகமாக வீசியதால் பந்து ஸ்டம்பில் படாமல் பவுண்டரி லைனை நோக்கி ஓடிக் கடந்து விட்டது. இதனால் பிராத்வெய்ட்டுக்கு 7 ஓட்டங்கள் கிடைத்து விட்டன.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இப்படி ஒரே பந்தில் 7 ஓட்டங்கள் எடுத்த சம்பவம் இப்போது தான் நடந்துள்ளது. அந்த வகையில் இது சாதனையாகும் என்று ஆபிரிக்க கிரிக்கெட் புள்ளிவிவர நிபுணர் ஆண்ட்ரூ சாம்சன் தெரிவித்துள்ளார்.

உலக சாதனை படைத்த பிராத்வெய்ட் 165 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்த டெஸ்ட் தொடரை தென்ஆபிரிக்கா வென்று விட்டது குறிப்பிடத் தக்கது. (த)


போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
★ திறந்த பல்கலைக்கழக ச/ட மாணி தெரிவுக்கு சனி, ஞாயிறு 10 → 02 மணி
★ முகாமைத்துவ உதவியாளர் ஞாயிறு 1.30 மணி புதன் 3.00 மணி
★ EB Exam இற்கு ஞாயிறு 9.00 மணி
★ கிராம சேவகர் EB இற்கு சனி 1.00 மணி
(55680)(10.7.3)
T.P: 075 4164 564
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)



தைப்பொங்கலை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்
தை 15 வரை
லங்காடைல், லங்கா வோல்டைல் உட்பட அனைத்து மாபிள்கள் மற்றும் கொமட்செற், பெயின்ட் வகைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

இலவசமாக விநியோகம் செய்யப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது)
நியூகமல் செரமிக்ஸ்
•37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 222 2085, 021 221 9305
(55692)(10.7.3)



எழுதுநர் தேவை
உதயன் பணிமனையின் சாவகச்சேரி கிளைக்கு ஆண் எழுதுநர் தேவை.
சாவகச்சேரி நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையை கீழ்வரும் முகவரிக்கு 15.01.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல.6000,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ƒ19008)(12.3.7)



BCLL
BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING
மொழிகள் கற்றிட தன்நிகரில்லா நிறுவனம்
ஆங்கிலம் ,இத்தாலிமொழி ,சிங்களம் ,ஜேர்மன்மொழி
ஆங்கில பயிற்சிநெறிகள்
Basic English -அடிப்படையிலிருந்து
Absolute Spoken English -சரளமான உரையாடலிற்கு
Advanced Dip in English -மொழித்திறன் விருத்திக்கு
A1,B1 - திருமணமாகி லண்டன் செல்ல இருப்போரிற்கு
IELTS- Your band guaranteed

வகுப்புக்களும் வழிகாட்டல்களும் இலகுவானமுறையில் புதிய கற்பித்தல் நுட்பத்துடன் நடைபெறுகின்றன.
அனுமதிகளுக்கு- தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுமதியை உறுதிப்படுத்திய பின் நேரில் வரவும்.
Professional Trainer-G.Rangit Thevarajan
21பலாலி வீதி யாழ்ப்பாணம்
[அப்பொலோ ஆஸ்பத்திரி முன்பாக]
T.P-0771327818



பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ். றோட், இணுவில்.
(இரு இடங்களிலும்)
A/L - 2017
✱தொழில் நுட்பப்பிரிவு
✱கலை, வர்த்தகம்
பிரிவு - II
ஆரம்பம்:
நாளை (10.01.2015) சனி
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(சி/19002) (4.3.7)
A/L Day ஆரம்பமாகி நடைபெறுகின்றன.



கார் விற்பனைக்கு
Axio Corolla 2007 WP KL xxxx White Colour Car விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 930 9991 (55891)(4.3.7)



தேவை
கடையில் போட்டோ பிரதி செய்யத் தெரிந்தவர், பழகக் கூடிய பெண் ஊழியர் தேவை.
நாவலர் வீதி, யாழ்.
071 8474 325



ECONOMICS HALL
ஆரம்பம் 12.01.2015
திங். - வெள்ளி வரை
A/L DAY
பொருளியல்
பொருளியல் உதயன்
திங்கள் செவ்வாய் } 12 ஆம் ஆண்டு பாடத்திட்டம்
வியா. வெள்ளி } 13 ஆம் ஆண்டு பாடத்திட்டம்
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பரீட்சை
பிரிவு I : 9.00 - 10.30
பிரிவு II : 10.30 - 12.00
Note:-கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடங்களின் நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்
நாவலர்றோட், யாழ்ப்பாணம். கிளை: ஸ்ரான்லி றோட்.



Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617972
Civil Mech.
Auto CAD
2D-Drawing and 3D-Modeling
University of Peratheniya + University of Moratuwa



Ananth
Institute of English Studies
O/L, A/L எழுதிய மாணவர்களுக்கான
Grammar, Spoken, Sinhala புதிய வகுப்புக்கள்
ஆரம்பம் 10.01.2015
Grammar திங்.புதன் 4.00 - 5.00
Spoken செவ்.வியா 4.00 - 5.00
Sinhala சனி.ஞாயிறு 4.00 - 5.00
14, Vellantheru, Jaffna.
M.No: 077 4045100



NJT இன் பட்டப்படிப்புக்கள்
பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி)
யாழ்., பேராதனை G.A.Q, B.A-I, B.A தமிழ்
K.தர்மராஜா
● பரீட்சை வழிகாட்டலுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள்.
● ஏனைய அனைத்து பாடங்களும் இங்கு நடைபெறுகின்றன.



பொருளியல்
A/L Day Class
S.ஜெயகுமார்
[B.A (Hons) Eco.Spl., M.A in Eco. (Pera)]
திங்கள் முதல் வெள்ளி வரை
ஆரம்பம்: 12.01.2015 காலை 6.30 மணி
DCM - யாழ் நகர்



Regd No.DS/589
கிருபா லேணர்ஸ்
(அரச அங்கீகாரம்பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வவுனியாவில்...
பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சி வழங்கப்படும்
இல. 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
024 222 7777, 077 710 04444
♦ தவணை முறைக் கட்டணம்.
♦ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
♦ விரைவில் எழுத்துப்பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்படும்.
♦ கனரக வாகனம் (AD) பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி.
♦ எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு.
♦ இரவு நேர வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
♦ ஓடத் தெரிந்தவர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற ஒழுங்கு செய்யப்படும்.
♦ அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சியை மேற்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| பருத்தித்துறை | : 021 492 3201, 071 454 6958 |
| சாவகச்சேரி | : 021 492 3202, 021 227 0700 |
| சுன்னாகம் | : 021 224 2022, 071 454 6956 |
| விசுவமடு | : 021 320 1515, 071 454 6955 |
| கிளிநொச்சி | : 021 228 5505, 071 454 6955 |
| நெல்லியடி | : 021 300 6550, 071 454 6957 |
| யாழ். கச்சேரி அருகில் | : 076 722 5292, 071 777 545 |
| மன்னார் | : 023 225 1656, 077 847 2717 |



Kiruba Learners
Govt.Approved A Grade Driving Training School
தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 0777 225292



நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு
Interlock Paving Stones


யாழ்ப்பாணம்
வவுனியா
பிரணவன் என்ரபிறைசஸ்
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சங்கிலியன் சிலைக்கு முன்)
077 3818799


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.